65

...த்தா
...த்தா } வை. மு. கோதை நாயகி அம்மாள்.

OFFICE OF THE REGISTRAR
3 - JUL 192

# JEGAN MOHINI

# ஜெகன்மோகினி

மலர் III 1926 இதழ் 8.



...கன் மோகினி ஆபீஸ்,
...26 தோடித் தெரு,
...ல்லிக்கேணி மதராஸ்.

JL
ஊ211,N125m
1926.3.8.
182826

ஒவ்வொரு... மாதமும் கடைசித்தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

அநேக நாட்களாய் எதிர்பார்த்தது! இப்பொழுதே வெளிவந்த

# பாண்டுரங்க பக்த விஜயம்

## ஐந்து பாகங்கள் அடங்கியது

பண்டரீபுர பக்தர்களின் சரித்திரங்கள் முழுமையும் அவ ளுடைய உருவப் படங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. ராய சைஸ் ஆயிரம் பக்கங்களுக்கு மேற்பட்டது. அழகான காலி கட்டடம் செய்துள்ளது.

ஏழை, பணக்காரன், புத்தியுள்ளவன், புத்தி இல்லாதவ பக்தியுள்ளவன், பக்தியில்லாதவன் ஆகிய எந்த நிலைமையிலிருப்பவ களும் படித்து நற்கதியடையலாம். இந்தப் புத்தகம் கையிலிருந்தா எவரும் தங்கள் வாழ்நாளை அமைதியாகவும், ஆனந்தமாகவும் கழிக் லாகும். இதனைப் படிப்பதனால் புருஷார்த்தங்களெல்லாம் கைகூடு இந்தப் புத்தகம் வைத்திருக்கும் வீட்டில் பகவான் சகல சம்பத்துட வாசம் செய்வாரென்பது பக்தர்களின் கொள்கை.

விலை ரூ. **6-0-0** வி.

---

புதிய நாவல்! இப்பொழுது வெளிவந்த

# ஆயிரம் தலைவாங்கிய

# அதிசய சிந்தாமணி

**3** ஆப்டோன் படங்கள் **350** பக்கங்கள்

விலை ரூபா ஒன்று.

எம். எஸ். ராமுலு கம்பெனி,

புத்தக வியாபாரம், ராயபுரம், மதராஸ்.

---

குறைந்த விலை! அபூர்வ விஷயம். சுத்தப் பதிப்பு!!

**English Self Instructor**. Rs. 1-8-0




## இங்கிலீஷ் உபாத்தியாயர்

அல்லது

## இங்கிலீஷ் கற்கும் வழி

நாவல் உலகத்தில் பிரசித்தி பெற்ற

வடுவூர் - கே. துரைசாமி ஐயங்கார் அவர்களின்

முகவுரையுடன் கூடியது.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் ப ளின் உச்சரிப்பு நன்றாக விளங்கும்படி வெளியிட பட்டிருக்கின்றது. உபாத்தியாயர் இல்லாமலே சுல மாகக் கற்றுக்கொள்ளலாம். பெண்பாலர்களும் சுல மாய்க் கற்றுக்கொள்ளலாம்.

தி. மதராஸ் நாவல் டிபோ,

3, இருசப்பன் சந்து, மின்ட் பில்டிங்ஸ் மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF ...
3 JUL 1926
MADRAS

## 10-வது அதிகாரம்

### கள்ளனுக்கேற்ற குள்ளநரி.

இரண்டாவது அதிகாரத்தில், வைதேகி ஜீவகாருணியத்தினுல் தூண்டப்பட்டவளாய், வீதியில் மோட்டாரினுல் விபத்து நேர்ந்த மனிதனைக் காக்கும்பொருட்டு டாக்டரை அழைக்கச் சென்றவிடத்தில் அன்னவர் 'பணம் கொடாமல் வருகிறதில்லை. பக்கத்து வீதியிலுள்ள மார்வாடியிடம் கடன் வாங்கிவா,' என்றுகூறி யனுப்பியதன் பிறகு அங்குச்சென்று, அவன் தன்னை வஞ்சிக்க எண்ணியதை யறிந்து தன் சொத்து போனுல் பாதகமில்லை என்றும், தன் கற்பு நிலைத்தால் போதும் என்றும் எண்ணி அவ்விடத்தை விட்டுத் திரும்பிச் சென்ற பிறகு, அந்த மார்வாடி அவளைக் கண்டு காமுற்று அவள் மேல் வைத்த விழியை வாங்காமல் அவளையே பார்த்திருந்தான். அவளது அற்புதமான வடிவழகில் அவன் ஈடுபட்டுத் தன்னை மறந்து, அவள் சென்ற திக்கையே விடாது உற்று நோக்கியபடி இருந்து, "ஆஹா! என்ன ரூபலாவண்யம்! என்ன மிருதுவான குணம்! அம்ருதகலசம்போன்ற முகமானது என் கண்ணைவிட்டுப் போகவே இல்லையே! என்ன செய்வேன்! ஆஹா! இவளுடைய துணிவான குணமும், பெருந்தன்மையும், வீரத்தனமும் ஒருங்குகூடிய பார்வையால் இவள் தலை குனிந்தபடியே உற்றுநோக்கிய காட்சி என் மனதை விட்டு மாற மாட்டேனென்கிறதே! மின்னல் தோன்றி மறைவதுபோல ஒரு விஞடி நேரத்தில் இவள் என்னை மயக்கிவிட்டு மாயமாய் மறைந்து போய் விட்டாளே. என் தந்திரமெல்லாவற்றையும் இவள் அறிந்து கொண்டு தன் சொத்தையும் சட்டை செய்யாமல் தப்பித்துப் போய் விட்டாளே. அடாடா! கேவலமான தாசி வகுப்பில் பிறந்தவளான இந்த மடந்தையின் அறிவே அறிவு! இந்த உலகத்தில், இந்தக் கலி காலத்தில், இத்தகைய ஜாதியில் பிறந்த யௌவனப் பெண்மணிகள் இப்படியும் ஒழுங்காக நடக்கிறுர்களா? அருமை! அருமை! இவளுடைய ரூபலாவண்யத்திற்குத் தகுந்தாற்போல மற்ற சகலமான அம்சங்களும் அதற்கு அனுகுணமாகவே அமைந்து கிடப்பதை எண்ண என் மனம் இவளை விட்டு அரை விஞடி நேரங்கூட அகலமாட்டேனென்கின்றதே! என்ன தைரியமாய் இவள் திரும்பிப் பாராமல் போய் விட்டாள்! அடாடா! என்ன வசிகரம்! என்ன வனப்பு! கண்கொள்ளாக் காட்சியாக வல்லவா இருக்கிறது!" என்று பலவாறுகச் சிந்தித்த வண்ணம் அவள் சென்ற திக்கையே கண் கொட்டாமல் பார்த்திருந்தான். அவள் சென்று மறைந்ததும் சற்று

நேரம் கல்லாய்ச் சமைந்து, பித்துப் பிடித்தவன்போல நின்றுகொண் கொண்டிருந்தான். அதற்குள் அங்குப் பின்பக்கத்தில் நின்று அவன் நடத்தைகளை எல்லாம் கண்ணுற்றுக் கொண்டே எதையும் கவனியா தவன்போல விருந்த அவனது வேலைக்காரன் தனது எஜமான் கடையைக் கவனிக்காமல் அவள் சென்ற திக்கையே நோக்கி நிற்பதைச் சற்று நேரம் வரையில் பேசாது பார்த்திருந்த பிறகு மெல்ல எஜமான் எதிரில் வந்து "எஜமானே! நகைப்பெட்டியைத் திறந்தீர்களே. பூட்ட மறந்துவிட்டீர்களா? அப்படியே இருக்கிறதே! காலமோ இரவு காலமாயிற்றே." என்று பணிவாய்க் கூறியதை அப்போதே உணர்ந்த மார்வாடி "நாம் நகைப்பெட்டியைத் திறந்து வைத்ததையும் மறந்துவிட்டு அந்தச் சுந்தராங்கியின் வடிவத்திலேயே ஈடுபட்டு ஐக்கியமாய் விட்டோமே. நல்லவேளையாய் இவன் நினைப்பூட்டினுன்" என்று எண்ணியவனுய் மெல்ல தன் மனத்தைத் தேற்றிக்கொண்டு உள்ளே செல்ல, அதற்குமேல் கடையைத் திறந்து வைத்திருப்பது அவனது மனம் அப்போதிருந்த நிலைமையில் அசாத்தியமாகத் தோன்றியதால் அவன் உடனே வழக்கம்போலப் பெட்டி பீரோ முதலியவைகளைப் பூட்டிவிட்டு, கடையையும் மூடிக்கொண்டு தன் விடுதிக்குச் சென்றுன். அன்று அவனுக்கு சரியான நிலைமையில் மனமில்லாமையால் அவன் அன்று இரவு ஆகாரத்தைச் சற்றும் நாடினுனில்லை. அவன் மனம் முற்றும் நமது ஆரணங்காகிய வைதேகியின் மேலேயே சென்றுவிட்டபடியால் அவன் அந்தச் சமயம் உயிரற்ற வெற்றுடல் போலவே காணப்பட்டான். அவன் அன்று இராப்போஜனத்தை அடியோடு வெறுத்துத் தனக்குப் பசி இல்லை என்றும் உடம்பு சரியாக இல்லை என்றும் கூறி அன்று பட்டினியாகவே தனது சயனத்தில் சாய்ந்தான். அவன் தூக்கமே கொள்ளாமல் ஏக்கமே வடிவாய் ஊக்க மற்றுச் சோர்வடைந்து படுத்து விட்டான்.

அந்த மார்வடியும் இயற்கையிலேயே சற்று அழகு வாய்ந்தவனுகையால் அவன் செயற்கை யழகும் அபாரமாய்ச் செய்துகொண்டிருந்தான். அவைகளுக்கெல்லாம் காரணம் அவனுக்கிருக்கும் அபாரமான தனத்தின் மகிமைதான். அவன் திருவல்லிக்கேணியில் பழைய நகைகளை வைத்துக்கொண்டு பணம் கொடுக்கல் வாங்கல் செய்யும் ஷராப்புக் கடையைத் தனது வீட்டில் ஒரு பாகத்தில் வைத்திருந்தான். அது தவிர பட்டணத்தில் தங்கசாலைத் தெருவில் நகைகள், வெள்ளிப்பாத்திரங்கள் முதலியவைகள் செய்துவிற்கும் பெரிய ஷாப்பு ஒன்றும் அவனுக்குச் சொந்தமாக உண்டு. அவன் தினம் காலை 10 மணி முதல் மாலை 6-மணி வரையில் தனது மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு பட்டணம் கடைக்கும் வீட்டுக் கடைக்குமாய் மேல் பார்வை பார்த்து, பாராக்காரன் போலப் பாராக் கொடுத்துக்கொண்டே யிருப்பான். மாலை 6-அல்லது 7-மணியோடு பட்டணத்துக்கடையின் கணக்கு வழக்குத் தகவலை முடித்துவிட்டு இங்கு வந்து சேர்ந்து விடு

182826

வான். அல்லது இதை முன்னல் முடித்துக்கொண்டு பிறகு அங்குச் சென்றாலும் செல்வான். அவனுக்குப் பட்டணத்துக் கடையிலும் பின்புறமெல்லாம் அவனுடைய சொந்த வீடே. அங்கேயும் தன் வீட்டு மனிதரில் சிலரைக் குடிவைத்திருந்தான். சில நாள் அங்கேயே இராத் தங்குவதுமுண்டு. அவன் கலியாணமாகாதவனுகையால், அவன் எதேச்சையாக எந்த விடத்தில் வேண்டுமானாலும் படுப்பதும் புசிப்பதுமாக விருந்தான். அன்று அவன் திருவல்லிக்கேணியிலேயே படுப்பதாய் வந்துவிட்டமையால் நமது வைதேகி அவன் கண்ணில் பட நேர்ந்தது. அவன் செல்வச் செறுக்கை நிரம்பவும் பெற்றவனுகையால் கல்வியில் அவ்வளவாகப் பயிற்சி யற்றவனுகவிருந்தான். தனக்குக் கடைக்கு வேண்டிய கணக்கு வழக்கிற்குப் போதிய அளவு சாதாரணமான படிப்பையே அவன் பயின்றிருந்தான். அவனுடைய தந்தையின் காலத்திற்குப் பிறகே அவன் அந்த வேலையில் அமர்ந்தான். அவன் வேலையிலும் பணத்திலும் வெகு அழுத்தமாயும் செட்டாயும் இருந்து வந்தான்.

அவன் விவாகமாகாத விட புருடனுகையால், அப்ஸர ஸ்திரீ போல விருந்த வைதேகியைக் கண்டவுடன் அவனுக்கு மோகம் தலைக்கேறிவிட்டது. அவன் அன்றைய இரவை வெகு கஷ்டப் பட்டுக் கடத்தினன்.

மறுநாள் உதயமும் ஆயது. அவன் மெல்ல எழுந்து தன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு அங்குள்ள கடையைத் திறந்து ஆள்களை எச்சரித்துவிட்டுப் பட்டணத்திற்குச் சென்றான். அன்று முழுவதும் அவனுக்கு மனம் சரியாகவே இல்லையாதலால், அவன் கடையின் வேலைகளை வழக்கம்போலக் கருத்தோடு செய்யாமல் ஏதோ மேன்போக்காகவும் வேண்டா வெறுப்பாகவும் செய்துகொண்டிருந்தான். தினம் வழக்கம்போலத் திருவல்லிக்கேணிக்கு லக்ஷம் தரம் போகாமல் இரண்டொரு தரமே அன்று அங்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்து தன் திண்டில் சாய்ந்த வண்ணமாகவே தனது மனதில் எண்ணறியாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி மனம் தவித்தவாறு அஸ் உஸ் என்ற பெரிய மூச்சுடன் உட்கார்ந்திருந்தான்.

அவன் அப்படிச் சோர்வடைந்து உட்கார்ந்திருந்த சமயம் சுமார் 5-மணிக்கு அங்கு ஒரு பெரிய நாட்டுக்கோட்டைச் செட்டியார் இன்னெருமனிதருடன் கூட கடைக்குவந்து சாவுகார் உட்கார்ந்திருந்த நிலைமையைக் கண்டு திடுக்கிட்டவராய் "என்ன சாவுகாரே! உம்முடைய முகம் நிரம்பவும் வாட்டமடைந்து இருக்கின்றதே. என்ன உடம்பு சரியாயில்லையா?" என்று கூறியவாறு அங்கு விரிக்கப்பட்டிருந்த ரத்தின கம்பளத்தில் உட்கார்ந்தார்.

அவர்களைக் கண்ட சாவுகார் "வாருங்கள் வாருங்கள். செட்டியார் தரிசனம் கிடைப்பது அரிதினும் அரிதாகவிருக்கிறது. என்ன

போங்கள். உடம்பில் நோயிருந்தால் சொல்லலாம். மனநோய்க்கு மருந்து யார் கொடுப்பார்கள் ஐயா?" என்றார்.

நாட்டுக் கோட்டையார்:—என்ன மனநோயா? என்னவிதமான நோய்? உமக்குக் கூடவா மனநோயிருக்கிறது? உமக்கென்ன குறைவு ஐயா?

சாவுகார்:—என்ன போங்கள். நேற்று ராத்திரி நான் திருவல்லிக் கேணியிலுள்ள நமது கடையிலிருந்தேன். அப்போது ஒரு பெண் ஆஹா! அவளுடைய அழகை என்னவென்று சொல்லுவேன்! அவள் ஏதோ அவசரமாகத் தனக்குப் பணம் வேண்டும் என்று தன் வளையலைக் கழற்றிக் கொடுத்துப் பணம் கேட்டாள். அடாடா! அவள் கடையில் கால் வைத்த வுடனேயே என் மனத்தையும் என்னையும் ஒருங்கே அவள் கொள்ளை கொண்டு விட்டாளய்யா. அவளுடைய அழகை சாதாரணமாய் வாயினால் சொல்லவே முடியாது. நேரில் பார்த்துத்தான் தெரிந்துக்கொள்ளவேண்டும். அவளைக் கண்டதனால் உண்டான மனநோயைத் தவிர எனக்கு வேறொன்று மில்லை.

நாட்டு:—என்ன ஆச்சரியமய்யா! அவளைக் கண்டதனால் உண்டான நோயை நிவர்த்திக்க நீர் வழி தேடவில்லையோ? ஏன் அந்தப் பெண் என்ன ஜாதிப் பெண்?

சாவுகார்:—அவள் தாசி வகுப்பில் பிறந்த பெண்ணும். அந்த வகுப்பில் பிறந்ததனால் நமக்கென்ன? அவள் கிடைப்பது எட்டாப் பொருளாய் விட்டது. அதைப்பற்றித்தான் என் மனம் நிரம்பவும் தவிக்கின்றது.

நாட்டு:—என்னய்யா விசித்திரமாய்ப் பேசுகிறீர்? அவள் தாசி வகுப்பில் பிறந்த பெண்ணென்றால் உம்முடைய பையில் ஒன்றை அவிழ்த்து அவளுடைய கையில் கொட்டிவிட்டால், நீர் மெய் மறந்து போகும்படியாய் அவள் உம்மிடம் வந்துவிடமாட்டாளா? இதற்காக அவளை எண்ணி ஏக்கமடையலாகுமா? எல்லாம் இந்தக் காலத்தில் பணந்தானே ஐயா பேசுகின்றது. நீர் பணத்தை அவிழ்க்காமல் வட்டிக்கு வட்டி போட்டுக்கொண்டிருந்தால் இந்த ஆசை எப்படித் தீரும்? எல்லாவற்றிற்கும் வெள்ளையப்பனை வீசி எறிவீரானால் உம் முடைய மனத்தைக் கொள்ளையடித்த கிள்ளை உம்மிடம் துள்ளிப் பறந்து வந்து உம்மை உள்ளங்களிக்கச் செய்துவிடாதா? அதற்கும் ஆசைப்பட்டு இதற்கும் ஆசைப்பட்டால் எப்படி? "கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை" என்பது போலல்லவா இருக்கிறது.

மார்வாடி:—அடாடா! என்ன பேசுகிறீர்! இந்த மாதிரி விஷயத் திற்கெல்லாம் பணத்தை யவிழ்க்காமலா பேசுவார்கள்? நான் நேற்று அவள் வளையலை வாங்கி வைத்துக்கொண்டு எவ்வளவோ தந்திரமெல்

லாம் செய்து அவளுக்கு வைரத்தில் கவசமே பண்ணிப் போடுவதாக வும் கூறினேன். அதையெல்லாம் அவள் லக்ஷியம் செய்யாமல் தன் வளையல் போனாலும் போகட்டும் என்று அதையும் மதியாமல் வெகு முடுக்காய்ப் போய்விட்டாளய்யா. அவள் பிறப்பில் தாசியாக இருந் தாலும் அவள் காசை நேசித்தால் தானே நமது ஆசை தீரும். அவள் தான் எதையும் சட்டை செய்யவே இல்லையே. அதற்கு என்ன செய் வது?

நாட்டு:—ஆ! அப்படிப்பட்ட பெண்மணிகளும் உலகத்திலிருக்கி றார்களா ? இதைக் கேட்க எனக்கு ஆச்சரியமாக விருக்கிறது—என்றார். அதற்குள் செட்டியாரோடு கூட வந்த மனிதர் பேசத் தொடங்கி! "ஏனய்யா! ஆச்சரியமென்ன? இந்தக் காலத்தில் தான் தாசிகள் தமது தொழிலை வேறு விதமாய் மாற்றிக்கொண்டார்களே. அதனால் நம்மு டைய பெட்டிப் பணமும் கொஞ்சம் குறையாமலிருந்தே வருகிறது. அவர்கள் செய்வது நல்லதை உத்தேசித்தோ கெட்டதை உத்தேசித் தோ தெரியவில்லை. அவ்விதத்துறையில் அவர்கள் இறங்கியிருப்பதால் அவர்களும் அதிகமாகக் கெட்டுப்போகாமலும், நம்முடைய பணமும் குணமும் கெட்டுப்போகாமலும் இருதிறத்தாரையும் திருந்தச் செய்வ தான ஹரிகதாகாலக்ஷேபத்தை அவர்கள் செய்வது ஒரு விதத்தில் அனுகூலந்தான். நீர் கண்ட அந்தப்பெண்ணும் ஒருகால் அந்தத் துறை யில் இறங்கியவளோ என்னவோ; அவர்கள் ஹரிகதை செய்ய முன் வந்த பிறகு பழைய தாசிகளைப் போல அநாகரிகமான அனியாயங் களைச்செய்யாமல் மிதமிஞ்சிய அட்டூழியத்தில் இறங்காமல் சில ஸ்திரீ ரத்னங்கள் குடும்ப ஸ்திரீகளைப்போலவே தாமும் இருக்கவேண்டும் என்பதான நோக்கத்தோடு வெகு கண்ணியமாய் இருப்பதால் அவர் கள் இவ்வித கேவலமான வேலையைச் செய்ய முன்வரமாட்டார்கள். வருவது மில்லை.

நாட்டு:—அது வாஸ்தவந் தானய்யா. இந்தக் காலத்திலுள்ள தாசிவகுப்பைச் சேர்ந்த சிலர் தாம் அதிகமாய்க் கெட்டுப்போகக் கூடாதென்ற கொள்கையினாலேயோ அல்லது இந்த ஜென்மத்தில் தான் "நாம் நாதனற்ற அனாதையர்களாய்ப் பிறந்துவிட்டோமே. மறு ஜென்மத்திலாவது எங்களைக் குலமாதர்களாகப் பிறப்பிக்க மாட்டாயா? ராமா! கிருஷ்ணா! கோவிந்தா!" என்று மனமுருகிப் பிரார்த்திப்பதுபோல அவர்கள் நாலு மணிநேரம் நின்று தவஞ் செய் வதுபோல ஹரிகதா காலக்ஷேபமென்னும் துறையில் இறங்கி அந்த நாலுமணி நேரமும் வேறு எவ்விதமான வேலையும் செய்யாமல் மனதில் எவ்விதமான எண்ணமும் வைக்காமல் அவர்கள் அழகாய்ப் பாடுவதிலும் பேசுவதிலுமே தமது கவனத்தைப் பூரா வாகச் செலுத்தி பகவன்நாமாவை விடாது நாலுமணி நேரம் அவர் கள் மனதில் எந்தவித நோக்கத்தை முன்னிட்டோ அழகிய சங்

கீதத்தின் வாயிலாகவும், பாக்களின் ரூபமாயும், சுலோகங்களின் இன்னெலியாலும் பிரம்மாநந்தமாய்ப் பாடிக் கேட்போரைப் பரவசப் படுத்தி அவர்களைத் தடைகட்டிய நாகம்போல ஒரே இடத்தில் அந்த பகவன்நாமாவைக் காதில் கேட்ட வண்ணமாய் உட்கார்ந்திருக்கச் செய்கிறார்களே. அதனுல் கூட இவ்விருதிறத்தார்களுக்கும் கிஞ்சிற்று லாபமிருக்கிறதல்லவா.

கூடவந்தவர்:—என்ன லாபமய்யா? தன் கைக் காசைக்கொட்டி டிக்கெட்டு வாங்கி வருகிறானே. அது தானே லாபம். அந்த பாகவதர்களுக்குத் தங்கள் தேகம் அழியாமல் பணத்தை வாங்கிக்கொள்வது லாபம், அவ்வளவுதானே.

நாட்டு:—நீர் சொல்லுகிறபடி அவர்களுக்கு லாபமிருக்கட்டும். முதலில் எப்பேர்ப்பட்டவனும் பகவான்நாமாவை வாயினல் உச்சரித்தாலும், காதினல் கேட்டாலும் அன்றன்றுடம் செய்த பாபங்கள் தொலையுமல்லவா. அதை அந்தப் பெண் பாகவதர்கள் சொல்வதனுல் அவர்கள் ஜாதிக்கேற்ற பாவத்தொழிலைச் செய்திருந்தாலும் அவர்கள் அந்த பகவன்னமாவை இடைவிடாது உச்சரிப்பதினல் அவர்கள் பாபமும் கொஞ்சம் விலகி விடுகின்றதல்லவா? மேலும் அதைக் கேட்போரில் எத்தனை மனிதர்கள் மனம் எப்படி இருக்குமோ. அவைகளெல்லாம் அந்தச் சமயம் எதையும் நினையாமல் அந்த இனிமையான சங்கீதத்தையே கேட்ட வண்ணமும் பகவன்னமா அடங்கிய சங்கீதத்தைக் கேட்பதனுலும், அந்த நாமாவை அவர்கள் வசன நடையில் சொல்லும்போது அதைக் கேட்பதனுலும் அவர்களுடைய பாபமும் சற்று விலகுகின்றதல்லவா? ஆண்பாலாராகிய பாகவதர்கள் கதை செய்யும்போது பாட்டுப் பாடும் சந்தர்ப்பம் வாய்க்கையில் மேல் ஸ்தாயிக்குப்போகும்போது அவர்கள் குரலை மேலே ஓடவிடாமல் தமது கையை உயர உயரத் தூக்கிக்காட்டி மேல் ஸ்தாயி மேலேயே இருக்கிறது.எனக்கு அங்கு குரலுடன் செல்வதற்கு லைசென்ஸ் கிடையாது. ஆகையால் என் கைபோகுமிடம் அண்ணுந்து பார்க்க உங்களுக்குச் சக்தி யுண்டானல்பார்த்துக்கொள்ளுங்கள்என்று கூறுவதுபோலக் கையைத் தூக்கிவிடுகிறார்களே. அப்படிக்கில்லாமல் இந்த லேடி பாகவதர்கள் நன்றாய்க் குரலைத்தூக்கிப் பாடும் முறையில் அழகாய்ப்பாடுவது மிகவும் இனிமையாக விருக்கிறது. அதைக் கேட்பது தான் போகிறவர்களுக்கு லாபம்.

கூட வந்த:—ஏனய்யா! அவர்கள் தமது பாடல் வெகு அழகாயிருக்கிறது, ஜிலுஜிலு என்று த்வனித்து ஆளை மயக்குகின்ற தென்று தானே அவர்கள் அதன் கருத்தை முன்னிட்டு இருப்பதுபோல் பாகவதர் என்று பெயர்வைத்திருக்கிறார்கள். அதன் அர்த்தம் பிரித்தால் வேறு மாதிரியாக நன்றாய்ப் புலப்படுகின்றது. மொத்தமாய்க்

கேட்பதில் பாகவதர் என்பது ஒரே பொருளாய் விளங்குகின்றது. அதைப்பிரித்துப்பாரும். ஒருபதம் தெலுங்கும் ஒருபதம் இங்கிலீஷுமாக ஏற்படுகின்றது. அதாவது பாகவதர் என்பதை பாக வேதர். என்று பிரிக்கலாம்; பாக என்பதுநன்றாக என்று அர்த்தமாகும். வேதர் என்பது ஜிலுஜிலுப்பாகவும் ஸொகுஸாகவும் வீசும் காற்றையே முக்கியமாய்க் குறிக்கும். ஆகவே ஸ்திரீகள் பாட்டுகளோடும், நர்த்தனத்தோடும் செய்யும் ஹரிகதா காலக்ஷேபம் குளிர்ச்சியான மந்தமாருதம் வீசுவதுபோல பிரம்மாநந்தமாக இருக்கிறது என்ற அர்த்தத்தையே நாம் கொள்ள வேண்டும். ஆதலால் அவர்கள் பாகவதர் என்ற பட்டம் பெற்றிருப்பது அவர்களுக்கு முற்றிலும் பொருத்தமானதே.

நாட்டு:—பேஷ். சிரிப்புவரும்படியான வேடிக்கையான அர்த்தம் இது.வெகு அழகாயிருக்கின்றது! யார் எப்படிப்போனால் நமக்கென்ன; அவர்கள் எவ்விதமாக நடந்தாலும் அவர்கள் அதற்குசாந்தியாக பகவன்னாமாவை உச்சரித்துப் பரிகாரம் தேடிக்கொள்வதோடு நம்முடைய காசையும் மிச்சப்படுத்திவைக்கிறார்கள். நமக்கு வேண்டியது அது தானே. வீணாகப் பணத்தைச்செலவிடுவது நிற்பதே போதும். அவரவர்கள் வயிற்றின் பிழைப்பிற்காக எத்தனையோ செய்து வயிற்றை வளர்க்கவேண்டியிருக்கிறது. காலை எழுந்தால் காலக்ஷேபத்திற்கு வழிவேண்டுமா இல்லையா? அதில் ஹரிகதை என்றதை முன்னால் கூட்டிக்கொண்டு பின்னால் காலக்ஷேபத்தை நடத்துகிறார்கள். எப்படியானால் என்ன? அவர்களில் பெரும்பாலோரும் இந்தத் துறையில் இறங்கிவிட்டபடியால், தமது தேகத்தையும், சாரீரத்தையும் போஷிப்பதற்காக சரீரத்தைக்கெடுத்துக் கொள்ளாமல், நெறியாக இருப்பார்களானால் அது எல்லாவற்றையும் விடச் சிலாக்யமல்லவா? இத்தகைய கண்ணியமான துறையில் இறங்கி விட்டதற்காகவாவது, ஹீனத்தொழிலை விட்டுவிடவேண்டி அவர்களை அவர்களுடைய மனமே தூண்டுமாகையால் அவர்கள், அந்தக் கட்டுப் பாட்டிற்காகிலும் கெட்டுப்போகாமல் வெகு குட்டாய்க் காலத்தைப் போக்குவது அவர்களுக்கு அத்யாவசியமாய் விட்டதாகையால் அந்த வகுப்பாற்கு எந்த எண்ணத்தை முன்னிட்டுச் செய்தாலும் வாயிலிருந்து வருவது பகவன்னாமம். அது ஒன்றுதான் நாம் முக்கியமாய் எடுத்துக்கொள்ள வேண்டியது. மற்றவை எப்படிப் போனால் நமக்கென்ன? அவர்கள் அவ்விதத் துறையில் இறங்கியதில் நம்முடைய கைக்காசு மிகுதியாயிற்று. அவர்கள் இந்தக் காலத்தில் பெரிய தொகையில் கிடைத்தால்தான் நம்மைத் திரும்பிப் பார்ப்பார்கள். சிறிய தொகையை அவர்கள் திரும்பிப் பார்க்கமாட்டார்கள். ஆகையினால் ஆயிரம் ஆயிரமாய்க் கொட்ட மனம் வராது. நமது பணம் கைவிட்டுப்போகாது. கூடவந்தவர்:—இன்னும் என்னைக் கேட்டால், பணத்தைவட்டிக்கு நஷ்டமாய்க்கொடுத்து நகைகளைவாங்கிப்போட்டுக் கொண்டு மினுக்குவது எனக்குச் சம்மதமே கிடையாது; வீட்டில்

பாழும் பெண்பிள்ளைகள் ஊராரைப் பார்த்து வைரக்கம்மல் வேண்டும்; திருகாணி வேண்டும் என்று என் பிராணனை எடுத்து விடுகிறார்கள். அந்த உபத்திரவத்தைத் தாங்காமல் நான் என் கைநடுங்கப் பணத்தை எடுத்துக்கொண்டு இங்கே வந்தேன். இப்போது 2 ஆயிரம் ரூபாயைப் போட்டுக் கம்மலை வாங்கிக் காதில் போட்டுக்கொண்டு குலுக்கினால் அதனால் வட்டி நஷ்டந்தானே ஐயா! நான் சாதாரணமாய் அனியாய மில்லாமல் தம்பிடிக்கு தம்பிடி வட்டிதான் வாங்குகிற வழக்கம்; அப்படி அருமையாய்ச் சேர்த்த என் பணத்தைப் பாழும் கம்ம லில் கொட்டிவிட எனக்கு மனமே வரவில்லை. இந்த இரண்டாயிரம் ரூபாய் அடுத்த வருஷம் நாலாயிரமாய்க் குட்டி போடாதா ஐயா! சிலபேர் அனியாய வட்டி வாங்கி மனமாறப் பணத்தைச் சேர்க்கிறார் களே, அப்படி நாமென்ன அனியாயம் செய்கிறோமா? சாதாரண தர்மவட்டி தம்பிடிக்குத் தம்பிடி வாங்கி என் தகப்பனார் எனக்கு வைத்துவிட்டுச் சென்ற 25 ஆயிரம் ரூபாயை நான் இப்போது என் கையாலேயே வட்டிக்குவிட்டுச் சேர்த்து 25 லக்ஷத்திச் சொச்சமாக்கியிருக்கிறேன். அதை அனியாய வட்டிக்கு விட்டிருந் தால், அது ஒருகோடி ஆயிருக்கும். அப்படிச் செய்ய எனக்கு இஷ்டமில்லை. நமக்குக் கண் தெரிந்து வழி நடக்கவேண்டாமா? தர்மவட்டி தம்பிடிக்குத் தம்பிடிதான் இதுவரையில் நான் வாங்கி வருகிறேன். எனக்கு மூன்றுநாளாய் சோறு தண்ணீரில்லை. இந்த இரண்டாயிரம் ரூபாய் வட்டி நஷ்டமாய்ப் போய்விடுகின்றதே என்று வீட்டில் என்ன சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. ஒரே பிடிவாத மாயிருப்பதால் தலையிலெழுத்தே, தலையின் கீழே கழுத்தே என்று தூக்கிக்கொண்டு வந்தேன். இந்த வைர நகைகளை வாங்கி வாங்கி எளவெடுத்த பாப்பாரப் பெண்கள் வழக்கம் செய்துவிட்ட தைக்கண்ட நம்முடைய பெண்களும் என்னைக் கொல்லுகின்றார்கள். தீராத எளவாய் நான் வந்தேன். வந்தவிடத்தில் வீண்வம்பு வளர்ந்து விட்டது. ஒரு வார்த்தையிலிருந்து ஒன்பது வார்த்தைக்குப் பாய்ந்து விட்டது. இனி வந்த காரியத்தைக் கவனிப்போம்—என்றார்.

நாட்:—என்ன சாவுகாரே. இந்த ஐயா நமக்கு மிகவும் பழக்க மானவராகையால், இவரை இங்கு அழைத்துவந்தேன். இவரும் நம்முடைய ஜாதியைச் சேந்தவர்தான். இவருக்கு ஒரு ஜதை வைரக் கம்மல் வேண்டுமாம். எடும் பார்ப்போம்; நேரமாய்விட்டது. வீணாக இந்த விஷயத்தில் மனத்தை அதிகம் செலுத்தவேண்டாம். அந்தப் பெண்ணில்லாவிட்டால் வேறொருத்தி ரெடியாக விருக்கிறாள். நான் வேண்டுமானால் அதற்குச் சகாயம் செய்கிறேன். நீர் கவலைப்பட வேண்டாம்—என்றான்.

மார்வாடி:—போமய்யா. அவளைப் பார்த்த கண்ணால்கூட மற் றொருத்தியை நான் பார்க்கமுடியுமா. நீர் அவளைப் பார்த்திருந்தால்

விடவேமாட்டீர். உம்முடைய சொத்தையெல்லாம் அவளுக்குப் பாத காணிக்கையாய்க் கொட்டுவதாகச் சொல்லி யழைப்பீர்; தெரியுமா? அவளைச் சாமானியப் பெண்ணென்று எண்ணினீர். தேவலோகத்துக் கன்னிகை யவள்தான் தெரியுமா?

நாட்டு:—ஆனல் நாம் அப்படிப்பட்டவளை வெறுமை விட்டு விடக் கூடாது. நீர் சொல்லும் வார்த்தை என்னையும் இழுக்கின்றது. நாம் எப்படியாவது யோசித்து அவளைத் தேடிப் பிடித்து விடுவதே சரி. நீர் இவருக்கு நகைகளைக் கொடுத்தனுப்பி விடும். பிறகு நாம் யோசிப்போம். இல்லாவிட்டால், இன்று நேரமாகிவிட்டது. நாளைக் காலையில் வருகிறேன்—என்று கூறினர்.

உடனே மார்வாடி தன்னெதிரிலிருந்த பெட்டியைத் திறந்து கம்மல்களை எடுத்துவைத்தார். அதில் சில ஜோடி கம்மல்களை எடுத்தார்கள். வைரங்களின் தோஷம் முதலியது பார்த்து மதிப்புப்போடுவதற்காக சதா அவ்விடத்திலேயே சம்பளம் கொடுத்து அமர்த்தியிருந்த ஒரு பெரியவரிடம் காட்டி தோஷம் முதலிய எதுவும் இல்லாத நாலைந்து ஜதைக்கம்மல்களைப் பொறுக்கி எடுத்து அதில் ஒன்றை முடித்துப் பணத்தைக் கட்டிவிட்டு அதைப்பெற்றுக்கொண்டு இருவரும் மார்வாடியிடம் சொல்லிக்கொண்டுபோய் விட்டார்கள்.

பொழுது அஸ்தமித்துவிட்டது. மார்வாடி அவர்களுடைய பேச்சின் பராக்கில் சற்று உட்கார்ந்திருந்தாலும் அவன் மனமோ சற்றும் அமைதியடைந்தபாடில்லை. அவ்வாறு அவன் உட்கார்ந்திருந்த தருணம் அந்தக் கடையின் வாயிலில் ஒரு பெட்டிவண்டி வந்து நின்றது. அதற்குள்ளிருந்து ஒரு பெரிய மனிதர் இறங்கி வெகு மரியாதையோடு நமது மார்வாடியை நோக்கிப் புன்னகை செய்த முகத்தோடு "ஐயா! தாங்கள்தான் இதன் சொந்தக்காரரோ?" என்றார்.

அதைக்கேட்ட மார்வாடி பெரிய மனிதரிடம் பணிவாகப் பேசத் தொடங்கி "ஆமாம் ஐயா! உங்களுக்கு என்ன தேவையோ தெரிவித்தால் அவைகளை உடனே தருகிறோம்" என்றான். அதற்குப் பெரிய மனிதர் "ஐயா! நாங்கள் எதுவும் வாங்க வரவில்லை. உங்களோடு தனியாக ஓர் அம்மாள் பேசவேண்டுமாம். வீதியில் வண்டியிலேயே இருக்கிறார்கள். சந்தர்ப்பத்தை யறிந்துகொண்டு போக வேண்டுமென்று நான் வந்தேன்" என்றார்.

அதைக்கேட்ட மார்வாடி பிரமிப்படைந்து, "நம்மைத் தேடிக் கொண்டு எந்தப் பெண்பிள்ளை வந்திருப்பாள். அப்படி நான் யாருடனும் தனித்துப் பேசும்படியான பேரமே வைத்துக்கொண்டதில்லையே. இதென்ன புதுமையாக விருக்கிறதே! சரி, எல்லாவற்றிற்கும் இவரைப் பார்த்தால் தக்க பெரிய மனிதராய்க் காணப்படுகிறார்.

இவரோடுகூட வந்திருப்பவளும் தக்க பெரிய மனுஷியாக இருக்க வேண்டாமா? ஆகையால் இவர்கள் பிரியப்படியே பேசுவோம்'' என்று எண்ணி வந்த மனிதரைப் பார்த்து "ஐயா! வரச் சொல்லுங்கள்; என்ன பேசவேண்டுமோ பேசலாம். இங்கு பேசுவதற்கு பலபேர் இருப்பதால் சங்கோசப்பட்டாலும், அதோ தனியாகவிருக்கும் அறைக்குள் போய்ப் பேசுவோம். சொல்லுங்கள்'' என்றான். உடனே பெரியவர் "ஐயா! நீங்கள் சொல்வதுதான் நல்லகாரியம். நாம் அங்கேயே போகலாம்" என்று கூறிவிட்டு வீதியில் பெட்டிவண்டியில் உட்கார்ந்திருந்த பெண்மணியை இறக்கி மார்வாடி காட்டிய அறைக்குள் அழைத்துச் சென்றார். அவள் வண்டியிலிருந்து இறங்கிவந்ததைக் கண்டதுதான் மார்வாடிக்குப் போன உயிர் திரும்பிவந்துவிட்டது போலாய்விட்டது. முதல் நாள் இரவு வைதேகியைக் கண்டு, அதனால் காமுற்று அவளை யடையச் செய்த தந்திரம் பலிக்காமல் போனதையும் அவள் தனக்குக் கிட்டாமல் போய்விட்டதையும் எண்ணி எண்ணி வருந்திக்கொண்டிருந்த மார்வாடி அதே பெண்மணி தான் எதிர்பாராவிதமாய் முந்திய நாளைவிட அதிகமான புது புது அலங்காரங்களைச் செய்துகொண்டு தன் கடைக்கு வந்ததைக் காண, அவனது மனத்தில் இன்னதென்று விவரிக்கயியலாத நூதன உணர்ச்சியும் விகாரங்களும் தோன்றி அவனை வதைக்க வாரம்பித்து விட்டனவென்றாலும் அவன் மனதில் இன்னொருவிதமான பயமும் தோன்ற வாரம்பித்தது. அதாவது தான் முந்திய நாள் அவளது கை வளையல்களை வைத்துக்கொண்டு அவளை அடைய எண்ணி அதைக்கொடுக்காமல் அபகரித்துக் கொண்டதற்காக அவள் பேசாது போய்விட்டாளே. பிறகு தன்மேல் அதைப்பற்றிக் குற்றம் சாட்ட யாரோவொரு பெரிய மனிதரை யழைத்துக்கொண்டு வந்து விட்டாளோ? அப்படியிருந்தாலும் அதற்குச் சாக்ஷியாருமில்லையாதலால் அவளை அந்த விஷயத்தில் தான் ஏய்த்துவிடலாம். ஆனால் இன்னொன்று தான் முந்தியநாள் தாறுமாறாய் அவளை வைதுவிட்டோமே அதற்கென்ன செய்வது? அப்படி வைதாலாவது அவள் தன்னிஷ்டப்படி வருவாளோ என்று பார்த்ததும் வீணாய் விட்டதே. மறுபடி அவள் எந்தக்கருத்தோடு வந்திருக்கிறாள் என்பது தெரியவில்லையே. எல்லாவற்றிற்கும் என்ன சொல்கிறாள் பார்ப்போம் என்று எண்ணி அவளது அற்புதமான சிங்காரத்தையும், கண்கொள்ளா வனப்பையும் கண்டு அப்படியே பூரித்து, ஸ்தம்பித்து, நெக்கு நெக்குருகி, தேகம் பூரித்து, புளகாங்கித மடைந்து கல்போல நின்றான்.

உள்ளே வந்த பெண்மணி ஸ்திரீகளுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்குவித சின்னங்களும் நிரம்பப்பெற்றவளாய்த் தலைகுனிந்தபடி ஆடி ஆடி நெளிந்து முகத்தை நன்றாகக் கவிழ்த்துக்கொண்டு நின்றாள். அவளோடுகூட வந்த மனிதன்

தான் எதையோ வைத்துவிட்டு வந்து விட்டமாதிரியாகச் சரேலென்று எழுந்து வண்டியருகில் போய்ப்பார்த்து விட்டு வருகிறேன் என்று கூறிய வண்ணம் மெல்ல நழுவிவிட்டான்.

தனியாக விடப்பட்ட மார்வாடி தான் என்ன பேசுவதென்பதையே அறியாமல் அவளது அழகிலேயே ஈடுபட்டு லயித்துப் போய்விட்டானுகையால் அவன் அப்போது அந்த உலகத்தையே மறந்து விட்டவன்போல விருந்தான். அங்கு தலைகுனிந்து நின்றுகொண்டிருந்த ஆரணங்கு மெல்லப் பேசத்தொடங்கி குரலோ, குழலோ, யாழோ, பாகோ, தேனோ வென இனிக்கும் குரலினுல் புன்னகை செய்தவண்ணம் தன்னிருகாலையும் மண்டியிட்டு வணங்கி, "ஐயா! என்னைத் தாங்கள் இன்னும் மறந்திருக்க மாட்டீர்களென்று நம்புகிறேன். நான் நேற்று திருவல்லிக்கேணியிலுள்ள தங்களது கடைக்கு வந்து வளையல்களை வைத்துக்கொண்டு பணம் கேட்டதைத் தாங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். அதற்குப் பிறகு நடந்த செய்திகளும் நினைவிருக்கலாம். ஏதோ என்மேலுள்ள பிசகினுலும் நான் செய்த தவறுதலாலும் தங்களுக்குக் கோபம் பொங்கி விட்டதால் நீங்கள் இந்த ஏழையை என்னென்னவோ சொல்லி விட்டீர்கள். அறியாமையால் நானும் முடுக்காகவே திரும்பிப்போய்விட்டேன். தாங்கள் என்னை நேற்று முதன் முதல் பார்த்ததுமே என்மேல் தாங்கள் ஆசைப்பட்டதை அடியாள் அறிந்தேனுனுலும் எனக்கு அப்போதிருந்த மனநிலைமையில் நான் அதை அதிகமாகக் கவனிக்க வில்லை. பிறகு நான் வீட்டிற்குப் போவதற்குள் என் பாட்டி வந்திருந்தாள். உடனே நான் நடந்த வரலாறுகளை யெல்லாம் விடாமல் தெரிவித்தேன். அதைக்கேட்ட என் பாட்டி என்னைத் திட்டினுள். "எப்படி நீ பேசாமல் வருவாய்? அவ்வளவு பெரிய மனிதர் உன்னைக் கண்டு, காதலுற்று உன்னை நேரில் கேட்ட காலத்தில் நீ அப்படி வந்தது சற்றும் பொருந்தாத காரியம். அவர் அபிப்பிராயத்தைத்தெரிவித்தவுடன் நீ அதற்கு இணங்கி அவர் இஷ்டப்படி நடந்து கொள்ளாமல் இப்படிப் பெரியதனம் செய்து அதிகப்பிரசங்கியாய் வந்ததைக்காண எனக்கு உன்மேல் அசங்கியமாக விருக்கின்றது. சீச்சி! துஷ்டப்பெண்ணே! நீ மறுபடி முன்னுல் அந்த இடத்திற்குச் சென்று அவரை யழைத்துக்கொண்டு வா" என்று என்னை அதட்டி மிரட்டி வைதாள். பிறகு நானும் சற்று யோசித்துப் பார்த்ததில் உங்கள் பிரியப்படி நடக்காமல் போய்விட்டோமே என்ற வருத்தம் ஏற்பட்டது. நான் உங்களையே நேற்று இரவு முழுவதும் எண்ணி எண்ணிப் புரண்டுகொண்டே இருந்தேன். நேற்று இரவே மறுபடியும் வருவதற்கு எனக்குக் கஷ்டமாயிருந்ததாலும், துணைக்கு வருவதற்கு யாரும் இல்லாததாலும், என் பாட்டிக்கு திடீரென்று உண்டான தேக அசௌக்கியத்தினுலும் அப்போதே வருவதற்கு முடியாமல்போய்விட்

டது. மேலும் நேற்று தாங்கள் இந்த ஏழை மீதில் அவ்வளவு கோபம் கொண்டு திட்டிவிட்டபடியால் அந்தக் கோபம் அப்போதும் தணிந்திருக்குமோ இருக்காதோ, மறுபடி நாம் அதே சமயத்தில் சென்றால் உங்கள் சித்தம் எப்படி இருக்குமோ வென்றும் யோசித்து, இன்று உங்களுக்கு இஷ்டமானபடி உங்களை மணக்கப்போவதால் உங்கள் ஜாதியார் கட்டுவது போலவே உடை தரித்துக்கொண்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, உங்களின் பிரியத்தை யடையும் பொருட்டு நானே துணிந்து வந்து விட்டேன். இந்த அடியாள் தெரியாத்தனமாய்ச் செய்துவிட்ட நேற்றைய தவறுதலை எல்லாம் மன்னித்து உங்கள் பிரியப்படி இனி என்னை எப்படி வேண்டுமானாலும் நடத்திக்கொள்ளலாம். இந்த நிமிஷம் முதல் நான் உங்களுடைய அடிமையாகி விட்டேன். இனி என்னைக் கைவிடலாகாது'' என்று வெகு உருக்கமாயும் தேனொழுகும்படியாயும் கூறி முடித்தாள்.

தான் சற்றும் எதிர்பாராவிதமாய் திடீரென்று, தான் எண்ணி வருந்திக்கொண்டிருந்த மடமங்கையே நேரில் வந்ததைக் கண்டுதன் மேல் குற்றம் சுமத்த வந்து விட்டாளோ என்று நினைத்துப் பயந்துக் கொண்டிருந்ததற்கு மாறாக தன் மனநோய்க்கு ஔஷதம் கொடுப்பது போன்ற வார்த்தைகளைச் சொல்லித் தன் காலில் விழுந்து, வணங்கி மன்னிப்புக் கேட்ட காக்ஷியைக் கண்ட மார்வாடியின் பாடு இன்னதென்று விவரிக்க வியலாததாய்ப்போய் விட்டது. ஆசை என்னும் தேர் ஓட வாரம்பித்துவிட்டது. அடடா! தான் நேற்று அவ்வளவு அதட்டி வைததையும் பாராமல் தன்னையே நாடிவந்த அதிரூப சுந்தரியைக் கண்டதுமே, அவன் மனதில் மோகம் கொந்தளித்துக் கரைபுரள வாரம்பித்தது. இன்னும் அவள் கூறிய வரலாற்றைக் கேட்டதுதான் தாமதம். அவன் மோகம் உச்சநிலையை யடைந்துவிட்டது. தேகம் பூரித்துப் புளகாங்கித மடைந்து விட்டது. அவளது மொழியைக் கேட்கக் கேட்க, அவன் மனம் முன் தினத்தின் செய்தியை எல்லாம் மறந்து, பாகாயுருக வாரம்பித்தது. அவன், அந்த ஆரணங்கை அப்படியே கட்டித் தழுவி முத்தமிடலாமென்ற ஆவேசத்தால், அவன் அவளைத் தன் காலைப் பிடித்திருந்த பிடியை விட்டு விலக்கித் தூக்கிப்பிடித்துத் தன் ஆவலடங்க முத்தமிட்டு விடுத்து, "என் மனத்தைக் கவர்ந்த மாமணியே! நான் ஏதோ ஆத்திரத்தினால் நேற்று மிகவும் பதற்றமாய்க் கூறிய வார்த்தைகளையும் பொருட் படுத்தாமல் என்மேல் கருணை கூர்ந்து நீ இங்கு வந்த பிறகு கூடவா நான் பழைய நினைவைக் கொள்வேன்? கண்ணே! அப்படி நான் செய்வேனென்று நீ எண்ணாதே. இனி நாம் இன்றுதான் புதிதாய் ஒருவரை ஒருவர் பார்ப்பது போல எண்ணி நேற்று நடந்த சம்பவத்தை அடியோடு மறந்து விடுவோம். என் விஷயத்தில் நீயும் உன் பாட்டியும் காட்டிய கருணைக்கு நான் உங்களுடைய அடிமையாகி விட்டாலும் போதாது. என் காதல் கிளியே! நான்

செய்த தவமே தவம். நேற்று நீ சற்று பேதமாய் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து என்னையும் மிஞ்சி முன் கோபத்தினுல் உன்னை நான் ஏதோ வித்தியாசமான வார்த்தைகளைச் சொல்லிவிட்டேன். பிறகு நீ வீட்டிற்குப்போனதும் என்பாடு இன்னதென்று விவரிக்க இயலாத கஷ்டமாய் விட்டது. நாம் கண் மூடித்தனமாய்த் தாறுமாருய்ப் பேசி விட்டோமே; இனி நாமாக அவள் காலில் போய் விழுந்தாலும் அவள் நம்மைத் திரும்பிப் பார்ப்பாளோ மாட்டாளோ வென்ற எண்ணமே என் மனதில் போராடிக்கொண்டிருந்த தாகையால், நான் என்ன செய்வ தென்று கலங்கி வருந்திக்கொண்டிருந்தேன். என் வருத்தத்தைப் போக்கத்தக்க தருணத்தில் நீயே வந்ததற்கு நான் எவ்விதமாய் உன்னைத் திருப்தி செய்வதென்பதை யறியாமல் இப்போது தவிக் கின்றேன். கண்மணி! இப்படி வந்து என் பக்கத்தில் உட்காரு'' என்று அவளை அன்பாகத் தூக்கி தான் உட்கார்ந்திருந்த சோபாவில் உட்கார வைத்துக்கொண்டான். பக்கலில் உட்கார்ந்த பெண்மணி வெட்கத்தால் நாணிக்கோணித் தலை குனிந்தவண்ணம், "என்னருமைப்பிராண காந்தா! தங்களுடைய சொத்து நானும் விட்டேன். என்னைத் தாங் கள் எவ்விதம் நடத்தினுலும் அவை எல்லாம் எனக்குத்திருப்தியே. அதைப்பற்றியா தாங்கள் கவலைப்படவேண்டும்? என்னை எவ்விதம் அலங்கரித்துப்பார்ப்பதில் உங்களுக்கிஷ்டமோ அவ்விதமெல்லாம் நான் நடக்கத் தயாராகிவிட்டேன். நகைகள் இல்லாமல் இப்போது இருக் கிறேன். இதுவே உங்களுக்கு நிரம்பவும் பிடித்தமாக விருப்பதால் தானே என்னைத்தாங்கள் வெகு அன்பாய் நடத்துகிறீர்கள். இன் னும் உலகத்தாரைப்போல நகைகள் நிறைய வைர செட்டாகவேபோட் டுப்பார்க்க வேண்டுமென்ருல், அது உங்களுக்கு ஒரு அசாத்தியமா? உங்கள் காலிலேயே மிதிபடுகின்றது. இதெல்லாம் உங்களிஷ்ட மல்லவா? இதைப்பற்றி எனக்குக்கவலையே இல்லை. ஆனுல் என் பாட்டிக்கு மாத்திரம் நான் எப்போதும் ஜிலு ஜிலு என்று நிறைய நகைகள் போட்டிருக்கவேண்டும்; மோட்டாரில் ஏறிச்செல்ல வேண் டும்; கண்ணுக்கு அழகான கணவன் வேண்டும். தினுசுக்கொரு புட வைகள் கட்டவேண்டும் என்ற இந்தப் பைத்தியக்கார எண்ணமெல்லா முண்டு. அதனுலே தான் இவைகளுக்கெல்லாம் இந்த இடந்தான் சரியானது என்று யோசித்து என்பாட்டி என்னைக் கட்டாயப்படுத்தி னுள். மேலும் எனக்கும் தங்கள்பேரில் மனப்பூர்வமான பிரீதி ஏற்பட்டு விட்டபடியால் நான் இதற்கு இசைந்து வந்தேனேயன்றி எனக்கு இஷ்டமில்லாமல், என்பாட்டி மாத்திரம் சொல்லி இருந்தால் நான் அதை லக்ஷியமே செய்திருக்கமாட்டேன். நேற்று ஓர் இரவே ஒருயுக மாக விருந்ததால் நான் உடனே புறப்பட்டு இன்று இரவுக்குள் உங் களை யடையவேண்டும் என்ற அவாவால் நான் ஓடிவந்தேன்'' என்று வெகு வாஞ்சையோடு கூறி அவனைக்கட்டித்தழுவினுள்.

அவளது இன்பம் ததும்பிய வார்த்தையைக் கேட்ட மார்வாடி அப்படியே மெய்மறந்து, உணர்வு கலங்கியவன்போல வீராவேசத்தோடு அவளை இறுகக்கட்டி அணைத்துக் கன்னத்தில் மாறிமாறி பலதரம் முத்தமிட்டு விடுத்து சரேலென்று எழுந்து "கண்மணி! இதோ வந்து விட்டேன்" என்று கூறியவண்ணம் வெளியில் சென்று 5 நிமிஷத்திற்கெல்லாம் கையில் ஒரு சிறிய பெட்டியோடு அவ்விடம் வந்து சேர்ந்து, "என்மனமோஹன சிங்காரி! நீ இப்படிக் கேவலம் நகைகள் இல்லாமலிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. உன் பாட்டி இஷ்டப்படியே இதோ வைரசெட்டு நகைகள் கொண்டு வந்திருக்கிறேன். இப்போதே நீ இவைகளை அணிந்துகொண்டு உன் ஜிலுஜிலுத்த அற்புத வடிவத்தைக்காட்டு பார்க்கலாம்" என்றான் அதைக்கேட்ட பெண்மணி "நாதா! எனக்கு இவைகளெல்லாம் பிடிக்காதென்று முன்னமேயே சொல்லிவிட்டேன். ஆயினும் நீங்களும் பார்க்கவேண்டுமென்று கூறுவதால் இதோ அணிந்துகொள்கிறேன்" என்று கூறி தான் ஏதோ சொல்பமாய் அணிந்திருந்த நகைகளைக் கழற்றி வைத்துவிட்டு அவன் கொண்டுவந்து வைத்த சுமார் 2 லக்ஷம் ரூபாய் தாளும்படியான வைரசெட்டு நகைகளை முறையே எந்த விடத்தில் அணிய வேண்டுமோ அப்படியே அணிந்து நின்றாள். ஆஹா! அவளது அப்போதிருந்த அதியற்புத ரூபலாவண்ய வனப்பைக்கண்ட மார்வாடி ஆநந்தத்தினால் தன்னிறையழிந்தான். தருணியைப் பன்முறை கால்முதல் தலைவரையில் நோக்கி, தேன் குடித்த நரிபோலப் பல்லைப் பிளந்துகொண்டு தாம் பூலோகத்திலிருக்கிறோமா, அல்லது தேவலோகத்திலிருக்கும் ரம்பையைப்போல நிற்கும் ரமணிமணியுடன் தேவேந்திரன் கொலுமண்டபத்திலேயே இருக்கிறோமாவென்ற சந்தேகம் கொண்டவன்போல அவ்வளவு அபரிமிதமான ஆநந்தம் பொங்கியவண்ணம் காமாந்தகாரனாய்க் கல்லாய்ச் சமைந்து அவள்மீது வைத்த விழியை வாங்காமல் நின்றுவிட்டான். அந்த மனமோகன சிங்காரியைப் பார்த்துப் பரமாநந்தம் அடைந்திருந்த மார்வாடியின் அப்போதைய நிலைமை விவரிக்க யியலாததாயிருந்தது. அந்த மடமங்கை அத்தனை வைரநகைகளையும் அணிந்துகொண்டு உல்லாசமாய் நின்ற காக்ஷி வெகு அழகாயிருந்தது. மார்வாடி திரும்பவும் அவளருகில் வந்து அவளை விடாமல் பலதரம் கட்டியணைத்துத் தனது ஆவலடங்க அவளது கன்னத்தில் முத்தமிட்டு நிமிர்ந்து மறுபடி யவளழகைக்கண்டு அப்படியே அசைவற்று நின்று விட்டான். மறுபடியும் வாய்திறந்து பேசத்துவக்கி, "என் கண்ணிருகருமணியே! என் மனத்தைக் கவர்ந்த மரகதமணியே! உன்னை இப்போது பார்த்தால், சாக்ஷாத் - லக்ஷ்மியோ, அல்லது சரஸ்வதியோ, அல்லது தேவ ரம்பையோ, இந்திராணியோ, அவர்கள் யாவரையும் விட அழகான ரதிதேவி தானோ ஒன்றும் தெரியவில்லை. ஆஹா! உன்னையே நேற்றுமுதல் எண்ணிருவந்திக்கிடந்த எனக்கு வலிய வந்து என்கலியைத் தீர்த்தகிளியே!

உனக்கு இவ்வாபரணங்களெல்லாம் வெகு அழகாக விருக்கின்றன. ஆயினும் இன்னும் ஒரு குறைவுமாத்திரம் இருப்பதை இப்போது தான் உணர்ந்தேன். கண்ணே! அதையும் இதோ நிறைவேற்று கின்றேன். இங்கேயே இரு.'' என்று கூறியவாறு சரேலென்று வெளியே சென்று வீதியில் ஆயத்தமாய் நின்று கொண்டிருந்த தனது மோட்டாரில் ஏறிக்கொண்டு அதை அருகிலுள்ள லக்ஷ்முதாஸ் தெரு விற்கு ஓட்டச்சொல்ல, வண்டியும் அவ்வாறே 5 நிமிஷத்தில் அந்தத் தெருவிலுள்ள செல்லாராம் ஷாப்பை யடைந்தது. உடனே மார் வாடி இறங்கிக்கடைக்குள்ளே சென்று எல்லாவற்றிற்கும் உயர்தர மான தங்கஜரிகைகள் நிறைந்த பட்டுச்சேலைகளை எடுக்கச் சொன் னன். உடனே அந்தக்கடைக்காரனும் அவன் ஏதோ அவசர நிமித்தமாக வாங்க வந்திருக்கிறுன். அவன் தலையில் சரியான விலையை ஏற்றிவிட்டால் நமது பெட்டி நிறைந்து விடும் என்று எண் ணினவனுய் மார்வாடியைப் பார்த்துப் புன்னகை செய்தவண் ணம் "வாருங்கள் வாருங்கள். ஏது? வெகுநாளாயிற்றே பார்த்து. என்ன விசேஷம்? பெரிய செட்டுப் புடவைகளை எடுக்கச்சொல் வதைப் பார்த்தால், தங்களுக்கு விவாகமகோத்ஸவம் நடை பெறப் போகிறப்போல விருக்கிறதே. உங்களுக்கு வேண்டிய பட் டுச்சேலைகளை எல்லாம் பார்த்து எடுத்துக் கொள்ளுங்கள். இந்தக் கடையும் உங்களுக்குச் சொந்தமல்லவா. உங்களிஷ்டப்படி எடுத் துக் கொள்ளலாம்'' என்று கூறியவண்ணம் அங்குள்ள எலக்ட்ரிக் லைட்டை எல்லாம் ஏற்றிவிட்டு பீரோவிலிருந்து கண்ணைப் பறித்து விடும் வண்ணமான ஒரே சரிகை மயமாயும், தினுசு வாரிகளாயும், கலர் கலராயும் பலதினுசு புடவைகளை எடுத்து நிரப்பிவிட்டான். அதைக்கண்ட மார்வாடி அவர்கள் பேசியதற்குப் பதிலாக தாமும் பேசத்தொடங்கி "என்ன ஐயா! எல்லோரும் சௌக்கியந்தானே. நாம் எல்லோரும் வியாபாரக்காரர்களாய் விட்டபடியால் அடிக்கடி சந் திக்க நேரிடுகின்றதில்லை. எனக்குக் கல்யாணமானுல் உங்களுக்கெல் லாம் தெரியாமல் இப்படியா திடீரென்று சேலை வாங்க வருவேன். அதெல்லாம் ஒன்றுமில்லை. எனது சிநேகிதர் குமாரத்திக்கு விவா கம். அதற்காக வாங்கவந்தேன். நேரமாய்விட்டது. இத்தனைநேரம் கடையில் சற்றும் ஓய்வே இல்லாமல் போய்விட்டபடியால் இப்போது தான் வர நேர்ந்தது. இதை வாங்கி எடுத்துக்கொண்டு நான் போக வேண்டும்'' என்று கூறிக்கொண்டே அங்கு எடுத்துப் போட் டிருந்த சேலைகளை எல்லாம் பார்த்தார். அத்தனையும் ஏககாலத் தில் அவர் கண்ணைப் பறித்துவிட்டன. அத்தனை தினுசில் எதை வாங்குவதென்றே அவருக்குத் தோன்றவில்லை. அங்கு வெறுமை பார்த்துக்கொண்டிருக்க நேரமில்லையாகையால் என்ன செய்வ தென்று யோசித்து "சரி. அவள் நல்ல சிவப்பாகையால் அவ ளுக்கு நீலந்தான் நன்றுயிருக்கும்.'' என்று தீர்மானம் செய்து

கொண்டு அங்கு இருந்த புடவைகளை எல்லாம் விட அதிக சரிகை உள்ளதும் அழகான வேலைப்பாடமைந்ததுமான நீலநிறப்பட்டாடையை எடுத்து விலைவிசாரித்தார். "இந்த ஒரு புடவைக்கு மாத்திரம் தங்களுக்காக எங்களுக்கு வந்த விலையைச் சொல்லி விடுகிறோம். ஏனெனில் நாம் ஒருவருக்கொருவர் வியாபாரியாதலால் நமக்குள் பேதமாவது பேரமாவது இருக்கக்கூடாதென்பது எங்களுடைய எண்ணம். இதன் உண்மையான விலை ரூ 1128-3-7 ஆகிறது. இது எங்களுக்குத் தபால் செலவு உள்படவந்த கரார்விலை. இந்தப் புடவையை வாங்குபவரின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இது வரும் போதே நாங்கள் இதை யார் கட்டக்கொடுத்து வைத்திருக்கிறார்களோ என்று எண்ணி இருந்தோம். அதற்குத்தங்கள் நண்பராகவே வந்தது சந்தோஷமாயிற்று. புடவைபேஷான புடவை. ஜரிகைகள் முதல்தரமான ஜரிகைகள். வேலைப்பாடோ சொல்லி முடியாதது. இதைத் தாங்கள் வாங்கிக்கொடுப்பது பெரியதில்லை. இந்தப்புடவையால் தங்களுக்குப் பின்னால் வரப்போகும் பெருமையும் கீர்த்தியும் வேறெவருக்கும் வராது. அத்தகைய சேலை இது." என்று பலமாக ஸ்தோத்திரம் செய்துக் கொண்டே புடவையைத் தட்டித்தட்டி மடித்து வைத்தான். மார்வாடி மனமெல்லாம் தன் வீட்டிலிருந்த வைதேகியின் மீதிலேயே இருந்தபடியால் அவர் எப்படியாவது சீக்கிரம் வேலையை முடித்துக்கொண்டு போகவேண்டும் என்ற நோக்கத்தோடு "சரி உங்களிடம் நானே பேரம் செய்வது அழகல்ல. ஆகையால் எடுத்து கட்டிக்கொடுங்கள்" என்று கூறித்தமது சட்டைப்பையிலிருந்த மணிபர்ஸை எடுத்து அதிலிருந்து ஒரு ஆயிரம் ரூபாய் நோட்டு, ஒரு நூறு ரூபாய், ஒரு ஐம்பது ரூபாய் ஆகமொத்தம் மூன்று நோட்டை எடுத்து அதைக்கடைக்காரன் கையில் கொடுத்துவிட்டுப் புடவையை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டான். அவர்களிட மிருந்து தனக்குச் சேரவேண்டிய பாக்கிப்பணத்தை வாங்குவதற்குக் கூட நினைவில்லாமல் வண்டியருகில் வந்து விட்டான். கடைக்காரன் இன்று "நல்ல நரி முகத்தில் தான் விழித்தேன் நல்ல லாபம் வந்தது" என்று எண்ணியவனாய் மீதிப்பணத்தைக் கொடுக்க மார்வாடியைப் பார்த்தபோது அவன் காணப்படவில்லை. உடனே அவன் மரியாதையாக வீதியில் வந்து பணத்தை மார்வாடியிடம் கொடுத்து "என்ன சாவுகாரே! பணத்தையும் வாங்கிக்கொள்ளவில்லை; ரசீதும் வாங்கிக் கொள்ளவில்லையே; அவசரம்போல விருக்கிறது." என்று கூறிக் கொண்டே உள்ளே போய்விட்டான். உடனே மார்வாடி வண்டியில் அமர்ந்து அடுத்த நிமிஷத்தில் தன் கடையையடைந்து புடவையுடன் உள்ளே சென்று வெகு சந்தோஷமும், பூரிப்பும் நிரம்பப்பெற்றவனாய் "என் மனோரஞ்சிதமே! மணியே! உனக்கு ஒரு குறை இருக்கிறதென்று கூறினேனே. அந்தக் குறை இதுதான். இதை வாங்கிக்கொள். முன்னால் நீ அந்த மட்டச்சேலையை நீக்கிவிட்டு இதைக்கட்டிக்கொள்"

கண்ணுட்டியே!' என்று பல்லையிளித்தவாறு குதிக்கின்றான். தலைகால் தெரியாதபடியான மோகமென்னும் பிசாசு அவனை வந்து கப்பிக் கொண்டது. சேலையைக் கையில் வாங்கிய மயிலாள் அதைக் கையிலேயே வைத்துக்கொண்டு, நாணிக்கோணித் தலைகுனிந்து வெகு வெட்கத்தோடு நின்றதைக் கண்ட மார்வாடி "என்ன யோசிக்கிறாய்? இந்தப் புடவை உனக்குப் பிடிக்கவில்லையா? இன்னும் உயர்ந்ததாக வேண்டுமா?" என்று நயமாகக் கேட்டான்.

அதைக்கேட்ட மாதரசி புன்சிரிப்பு தவழ்ந்த வதனத்தோடு "எனதாருயிர்க் காதலரே! எனக்கு இவ்வளவு பெரிய அபாரமான சேலை எதற்கு? இதை வாங்கும் பொருட்டாகவா தாங்கள் இப்போது என்னை விட்டுப்பிரிந்து சென்றீர்கள்? நகைகள் தாம் தங்கள் கைவசமே இருப்பன; தங்களுக்கே சொந்தமானவை. கஷ்டமின்றி இங்கிருந்து இப்படியே எடுத்துக்கொடுத்ததால் அதைத்தடை சொல்லாது உங்கள் பிரியம்போல அணிந்தேன். இந்தப்புடவைக்காகத் தாங்கள் வெளியில் சென்று அலைந்து திரிந்து ஆசையோடு வாங்கிவந்து கட்டிக்கொள்ளும்படி என்னிடம் சொல்வித் தாங்கள் என்னழகைப் பார்க்கவேண்டுமென்று ஆவல்படுவதால் இதோ உங்கள் பிரியப்படியே கட்டிக்கொள்கிறேன். இந்தப் பக்கத்து அறைக்குள் போகலாமா?" என்று கிள்ளையினுமினிமையான கொஞ்சலாகக் கேட்டாள்.

அதைக்கேட்ட மார்வாடி தன்னெதிரில் புடவை கட்டிக்கொள்ள வெட்கி அவள் அந்த அறைக்குள் போகலாமா என்றுகேட்கிறாள் என்பதை ஒரு நொடியில் அறிந்து கொண்டானதலால் அவன் தந்திரமாக, "கண்ணே! வண்டியில் என் சாவியை வைத்துவிட்டு வந்துவிட்டேன். அதை எடுத்துக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லி வெளியில் போய்விட்டான். அந்தச் சமயம் அவள் அந்தப் பட்டுச் சேலையை மார்வாடிகள் கட்டுவதுபோலவே வெகு அழகாய்க் கட்டிக்கொண்டு வைரமிழைத்த ஒட்டியாணத்தையும் அணிந்து கொண்டு வெகு உல்லாசமாயும், கந்தர்வ ஸ்திரீபோலவும் நின்றாள்.

வெளியே சென்ற மார்வாடி மறுபடியும் உள்ளே வந்த சமயம் அந்த வனிதாரத்னம் தேஜோமயமாகிய திங்களின் ஒளியோவென பிரமிக்கத்தக்கவாறு நின்றிருந்த காக்ஷி எப்படி இருந்ததெனில், அவளுடைய நீல நிறப்பட்டாடை ஆகாயம்போலவும், அதில் நடுவில் விழுந்திருந்த ஜரிகைப்பூக்களும் அவள் தேகத்தில் அணிந்திருந்த வைர நகைகளும் நக்ஷத்திரங்கள் போலவும், அவளது அழகிய முகம் வானத்திலுலாவும் மதிபோலவும், சிரத்தின் கேசம் மேகத்தைப்போலவும் காணப்பட்டதை நோக்கிய மார்வாடி தான் ஆகாயத்தில் பறப்பவன்போல எண்ணிக் கையை விரித்துக்கொண்டு இறகில்லாமல்

பறந்து வந்து அந்த அதிரூபலாவண்ய சிங்காரியின் மீதில் பாய்ந்து அவளை ஒரே தூக்காய்த்தூக்கிச் சிறிய குழந்தையைப்போல எடுத்துக்கொண்டு அந்த அறைக்குப் பக்கத்திலிருந்த அவனது சயன அறைக்குத்தூக்கிச் சென்று கட்டிலண்டை நெருங்கினன். அது வரையில் திமிருமலிருந்த பெண்மணி அதற்குப் பிறகு மெல்ல அவன் கையிலிருந்து திமிறிக் கீழே இறங்க முயன்றாள். அவளைக் கெட்டியாய்ப் பிடித்திருந்த மார்வாடி அவள் திமிறியதற்குக் கீழேவிடாமல் அப்படியே குழந்தையைப்போல வைத்தவண்ணம் கொஞ்சலாகப் பேசத்தொடங்கி "என்ன கண்ணாட்டி! கையிலிருந்து திமிறுகின்றாயே? ஏன் அப்படிச் செய்கின்றாய்? இதோ இந்தக் கட்டிலில் நாம் சரசமாய் உல்லாசமாய், விளையாடுவோம் வா, கண்மணி" என்று கூறியவண்ணம் கட்டிலில் அவளை விடுத்துத் தானும் உட்கார்ந்தான்.

கட்டிலில் உட்கார்ந்த காரிகை மெல்லச் சிரித்தவண்ணம் பேசத்தொடங்கி "என் பிராணபதியே! நான் எப்படியும் தங்களுக்கு அடிமையாகிவிட்டேன் என்று நான் முன்னரே தெரிவித்தேனல்லவா. அதன்படி நான் உங்களுடைய அடிமையேதான். அதற்கு ஆக்ஷேபனையே இல்லை. என்னை எப்படி வேண்டுமானாலும் நடத்த சர்வாதிகாரமும் உங்களுடையதல்லாது இனி வேறு யாருக்கு இருக்கின்றது? என்னுடைய எண்சாண் உடம்பும் யௌவன வயதும் உமக்கே தாரைவார்த்துவிட்டேன். ஆகையால் தாங்கள் இஷ்டப்படி என்னை நடத்தலாம். இருந்தாலும் நான் ஒரு விண்ணப்பம் செய்துகொள்கிறேன். அதாவது என்னைத்தாங்கள் எங்கள் ஜாதியின் முறைப்படி விவாகம் செய்துகொள்வது முக்யமானதாகையால் என்பாட்டி அதை நூறுதரம் உறுதியாய்க்கூறி இருக்கிறாள். இன்று நல்ல சுபதினமாம். அங்கு என் வீட்டிலேயே தங்கள் வருகைக்கு வேண்டிய சகலமான ஏற்பாட்டையும் நான் திரும்பி வருவதற்குள் என் பாட்டி செய்து வைக்கிறாளாம். எப்படியாவது உங்களிடம் நேற்று நடந்ததற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டுதங்களை என்வீட்டிற்கே அழைத்துக்கொண்டு வரும்படியாய்ச் சொன்னாள். எனக்கும் அதுவே பிரியமாகையால், தெரிவித்தேன். எங்கள் ஜாதியின் சாஸ்திரப்படி நாங்கள் நடக்காவிட்டால் பெருத்த பாபமாகும். மேலும் அதிக கஷ்டப்படுவார்கள் என்றும் எங்களுக்குள் ஒரு கட்டுப்பாடுண்டு. ஆகையால் அதைத் தெரிவித்தேன். எல்லாவற்றையும் யோசித்து எது யுக்தமோ அவ்விதம் சித்தப்படிச் செய்யுங்கள். நான் சொல்லவேண்டிய கடமைப்படி சொல்லிவிட்டேன்" என்று கிள்ளை மொழிவதுபோலக் கொஞ்சிக் கொஞ்சிக் கூறினாள். அதைக்கேட்ட மார்வாடி கட்டிலடங்கா ஆநந்தமும் களிப்புமடைந்தவனாய் "ஆ என் ராஜாத்தியே! மனோஹர வடிவே! உன்னிஷ்டம்போலவே நான் நடக்கத் தயாராகவிருக்கிறேன். ஆனாலும் இப்போது நீ என் இஷ்டப்படி நடந்துவிட்டால் அது எனக்கு வெகு

சந்தோஷமாக விருக்கும். எப்படியும் நீயும் நானும் ஒருயிரும் ஈருடலுமாய் விட்டோமல்லவா? ஆகையால், நம்முடைய மனமொத்து விட்டபிறகு அந்தச் சடங்குகளெல்லாம் எதற்கு? மனமொத்துவிட்டால் இனம் ஒத்துவிடுகின்றது என்பார்களே. அதே போல நாமென்னவோ பாலும் நீரும்போல ஆய்விட்டோம். இனி இந்த நிமிஷம் முதல் நாம் எப்படி இருந்தாலும் அது ஒருநாளும் குற்றமே ஆகாது. ஆகையால் அதைப்பற்றி நீ சற்றும் கவலைப்பட வேண்டாம். பகவானே நம்மைக் கூட்டி வைத்துவிட்டார். இனி நமக்குப் பயமென்ன? ஒன்றுமில்லையாகையால், நீ சற்றும் கவலைப்படாமல் என்னிஷ்டம்போல இப்போது நடந்துவிடு. பிறகு உன்னிஷ்டம்போலவே நானும் உன்னோடு கூடவே வருகிறேன். இருவரும் ஒன்றாகச் சென்று உன்பாட்டிக்கு நமஸ்காரம் செய்துவிட்டுப் பிறகு அவர்கள் இஷ்டப்படியே சடங்குகளை வெறுமை வேடிக்கையார்த்தமாகச் செய்து கொள்வோம். கண்மணி! என்ன பேசாது மௌனமாக விருக்கின்றாய்? உன்னிஷ்டத்தை வெளியிடு'' என்றான்.

அதைக்கேட்ட அந்தப் பெண்மணி சற்று விசனித்தவளாய்க் கண்ணைக் கசக்கிக்கொண்டு "என் பிராணநாதா! நான் என்ன பதில் சொல்லப்போகிறேன். எனக்குத் தாயா, தந்தையா, உடன்பிறந்தாரா, உற்றாரா, சுற்றத்தாரா எவரும் இல்லை. என் தாயார் எவ்வளவோ தவம் செய்து என்னை ஈன்ற பிறகு உடனே பரலோகமடைந்துவிட்டாளாம். அதற்குப் பிறகு என்னை அன்புடன் ஆட்டி ஊட்டி வளர்த்த என் பாட்டி ஒருத்திதான் எனக்கு இந்த உலகத்தில் இருப்பவள்; அவ்வளவு அருமையாய் என்னையே பிரபஞ்சமாக எண்ணி வளர்த்துவரும் என்பாட்டியின் மனம் கோணும்படியாக நான் நடந்தால் அது சரியாகுமா என்பதுதான் என் மனத்தை வதைக்கின்றது. மேலும் இந்தக் காரியம் எல்லாம் கண்மூடிச் செய்துவிடும் காரியமா? காய்கறி பேரமா? இது நம்முடைய ஜீவியகாலமுற்றும் அழியாப் பயிர்போல இருக்கவேண்டிய முக்கியமான காரியமல்லவா? நாம் எல்லாவற்றையும் உத்தேசித்தேதான் செய்ய வேண்டும். எனக்கு விவாகம் செய்து அதைக் கண்குளிரப் பார்க்கவேண்டுமென்று வெகு ஆவலாயிருக்கும் என் பாட்டியின் மனத்தை நாம் முதலில் திருப்திசெய்தால் தானே நமக்கு என்றும் அழியாக்ஷேமம் உண்டாகும். மேலும் என்னை முதன் முதல் நீங்கள் எங்களுடைய குலாசாரப்படி மணந்துகொள்வது தான் சிலாக்கியமானது. அதிலும் இப்போது தாங்கள் என்னை மணப்பதற்காகத் தாமதிக்க வேண்டுவது ஒன்றுமில்லையே. இன்னும் 2 மணி சாவகாசந் தானே பொறுக்கவேண்டும். அவ்வளவு தயவு என்மேல் தாங்கள் வைக்கலாகாதா? இப்போது மணி எட்டு இருக்கும்போல விருக்கிறது. நீங்கள் சரியாகப் பத்துமணிக்கு என் வீட்டிற்கு வந்தால்

அப்போது தான் நல்லவேளை என்று என் பாட்டி நாள் பார்த்திருக்கிருள். அந்த நல்ல சுபமுகூர்த்த வேளையில் எங்கள் ஜாதி வழக்கம் போலச் சுருக்கமாக விவாகச்சடங்கை அதிக படாடோபமில்லாமல் ரகஸியமாகவே நாம் செய்து விடலாம். உங்கள் இஷ்டப்படி பிறகு என்னை எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம். அந்த வீட்டில் இரவு உங்களுக்கு இருக்க இஷ்டமில்லாவிட்டால் நாம் பிறகு மோட்டாரில் இவ்விடமே வந்து சேர்ந்து விடுவோம்; என்னருமைப் பிராணபதி! என்ன பதில் உங்கள் வாயிலிருந்து வரப்போகிறது என்று எதிர்பார்க்கிறேன்'' என்று வெகு உருக்கமாயும், இனிமையாயும் கூறி மார்வாடியின் முகத்தைப் பார்த்தாள்.

அதைக் கேட்ட மார்வாடி "என் காதல் களஞ்சியமே! நீ என்ன ஒருவரைப்போல அறியாத முட்டாளா! நீ தான் நல்ல கெட்டிக்காரப் பெண்ணுச்சே. நீ எல்லா நீதிகளையும் எடுத்துரைக்கும்போது நான் என்ன விதமான பதில் மறுத்துக்கூறப்போகிறேன். நீ இட்டது தான் இனி எனக்குச் சட்டம். அதற்குக் கட்டுப்பட்டவன் தான் நான். இனிமேல் உன்மனம் வருந்தும்படி நான் எதையும் கூறுகின்றதில்லை. கவலைப் படவேண்டாம் கண்மணி! எனக்கு இன்னென்று தோன்றுகின்றது. அதன்படி செய்ய உனக்குச்சம்மதமா என்பதைத் தெரியப்படுத்துவாய். உன் பாட்டிக்கு வண்டியனுப்பி அவர்களை இங்கேயே அழைத்துக் கொண்டு வந்துவிடுவோம். அவர்கள் இஷ்டப்படியே எல்லாம் இந்த அறையிலேயே ரகஸியமாய்ச் செய்துவிடட்டும். பிறகு நாம் நீடுழிவாழ்ந்திருக்கலாம்'' என்று வெகு அன்பாய்க் கூறினன்.

அதைக் கேட்ட பெண்மணி முன்னிலுமதிக விசனத்தோடு "ஆஹா! இந்த யோசனை எனக்கு மிகவு மிஷ்டந்தான். ஆனல் அது நடவாதகாரியமாயிற்றே. என்பாட்டி நல்ல திடசாலியாயிருந்தால் என்னை, இப்படித்தனியாக அனுப்புவாளா? அவளே வரமாட்டாளா! அவள் நேற்று ஏதோ காரியமாகத் தேனும்பேட்டைக்குப் போனதாகச் சொன்னேனல்லவா? அவள் அங்குப்போன காரியத்தைப்பார்த்துக்கொண்டு திரும்பி குதிரைவண்டியில் வரும்போது குதிரை மிரண்டு வண்டியோடு கீழே விழுந்துவிட்டதாம். அதனல் என்பாட்டியின் உயிர் மிஞ்சியது என்னுடைய அதிர்ஷ்டமென்றே சொல்ல வேண்டும். அவள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருள். உடம்பெல்லாம் அடிகள்பலமாய்ப்பட்டிருக்கின்றன. அவள் அந்த விபத்திலிருந்து உயிர்பிழைப்பாளோ மாட்டாளோ அதுவே சந்தேகமாக விருப்பதால் தான் எனக்குத் தாங்களும் தக்கசமயத்தில் வாய்த்தமையால் இன்றே சுபதினமாகவும் இருப்பதால் என் பாட்டி இதை எப்படியாவது நடத்திவிடத் தீர்மானித்துத் தன் உயிர் இருக்கையிலேயே பார்த்து விடவேண்டும் என்ற பேராவலினல் தூண்டப்பட்டவளாய் என்னை யனுப்பினுள். ஆகையால்தான் நான் என் வீட்டிலேயே இந்தக்காரியம்

நடக்கவேண்டும் என்று சொன்னேன். அவளால் படுத்த இடத்தை விட்டு அசையவே முடியாது. அவளுக்கு இந்நேரம் தண்ணீர் கொடுப்பார்கூட இல்லையாதலால் நான் முன்னால் அங்குப் போகிறேன். என் வீடுதான் தங்களுக்குத் தெரியுமே. நீங்கள் சரியாகப் பத்து மணிக்கு அங்குவந்து சேர்ந்துவிடுங்கள். சாகுந் தருவாயிலிருக்கிற கிழவியை இனி நான் விட்டுவிட்டு இங்கிருப்பது தர்மமல்ல. நாதா! தாங்கள் எனக்கு உத்தரவு கொடுத்து அனுப்பிவிட்டுச் சரியாய்ப் பத்துமணிக்குத் தட்டாமல் வந்து சேர்ந்துவிடுங்கள்'' என்று கெஞ்சியவாறு கேட்டாள்.

அதை எல்லாம் கேட்ட மார்வாடி மேலே பேசுவதற்கே இடமில்லையாகையால் தான் இனி வாதாடுவது சரியல்ல; இவள் எப்படியும் என் சொந்தக் கண்ணாட்டியான செல்வச் சீமாட்டியாகிவிட்டாள். ஆகையால் இவள் இஷ்டம்போலவே நடந்துகொள்வோம் என்று யோசித்தவண்ணம் "கண்ணே! நான் உன் பாட்டியின் நிலைமையைக் கேட்க மிகவும் வருந்துகிறேன். இந்த நிலைமையில் அந்த அம்மையையும் தனியாக விட்டுவிட்டு நீ என்னையே உன் ஜீவாதாரமாக எண்ணிவந்ததற்கு நான் என்ன தான் செய்யப்போகிறேன். உன்னிஷ்டப் படியே சரியாய்ப் பத்துமணிக்கு வந்து சேருகிறேன். நீயும் என்னோடு கூடப்போகலாம் என்பதற்கு உன் பாட்டியைஅவ்வளவு நேரம் தனித்திருக்கவிடுவது தகாது. சரி. நீ சென்று தயாராகவிரு; நான் சரியாய்ப் பத்துமணிக்கு வந்து சேருகிறேன்.'' என்றுகூறிய வண்ணம் அவளைப்பலதரம் முத்தமிட்டுத் தனது பலம் கொண்ட வரையில் வீராவேசத்தோடு கட்டியணைத்துப் பிறகு விடுத்தான். உடனே அந்த ஆரணங்கு அவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு "என் கண்ணாளா! தங்களைவிட்டுப்போகஎனக்குமனம் வரவே இல்லை. என்னசெய்வேன்? என்பாட்டிக்காக நான் கட்டாயமாய்ப் போகவேண்டியிருக்கிறது. சீக்கிரம் வந்துவிடுங்கள். அதிகநேரம் உங்களைப் பிரிந்து என்னால் இருக்க முடியாது. சீக்கிரம் வந்துவிடுங்கள் நாதா! நான் போய் வருகிறேன்.'' என்று கூறியவண்ணம் மெல்ல அன்னம் நடப்பதுபோல நடந்துவந்து மின்னல்தோன்றி மறைவதுபோலச் சரேலென்று வீதியில் நின்றிருந்த தனது பெட்டி வண்டியில் உட்கார்ந்து கொண்டாள். உடனே வண்டிவேகமாகப் பறக்கவாரம்பித்தது.

அந்த ஆரணங்கை விட்டுப்பிரிய மனம் வராமல் தவித்துக்கொண்டிருந்த மார்வாடி வண்டி அந்த வீதியை விட்டு மறையும் வரையில் பல்லைப் பிளந்துகொண்டு அந்தத்திக்கையே நோக்கிய வண்ணமாய் நின்றிருந்து பிறகு வண்டிமறைந்ததும் உள்ளே வந்தான். அங்கு, அந்தக்கட்டிடம் முழுவதும், ஒரே இருளாய்ப் போய்விட்ட மாதிரியாய் அவன் கண் இருண்டுவிட்டது. அவனது தேகம் மாத்திரம் அங்கு நின்றதேயன்றி அவனது மனமெல்லாம் அந்த மடமயிலின் கூடவே

சென்றுவிட்டது. அவன் தன்னிறையழிந்து சற்றுநேரம் ஒரு வேலையிலும் மனம் நாடாது பித்தன்போல இருந்தான். மறுபடியும் உடனே கடையை எல்லாம் மூடிக்கொண்டு தனது மோட்டாரில் திருவல்லிக்கேணிக்குச் சென்று அந்தக் கடையையும் பூட்டிக்கொண்டு தனது விடுதிக்குள் சென்று ஸ்நானபானம் செய்துவிட்டுத் தன்னை வெகு சொகுசாய் அலங்காரம் செய்துகொண்டு, வைரசெட்டில் மோதிரம், கடுக்கன், கடியாரம், பொத்தான் முதலியவைகளை யணிந்துகொண்டு, நல்ல முதல்தரமான ஜரிகை வேஷ்டியைக் கட்டிக்கொண்டு, ஜிகினுவே மயமான சொக்காய், குல்லா முதலியவற்றைப் போட்டுக்கொண்டு, நெற்றியில் ஜவ்வாதுப்பொட்டு அணிந்து, பரிமள வாசனைகளை வாரி உடம்பில் ஏராளமாய்ப் பூசிக்கொண்டு, கலியாண மாப்பிள்ளைபோல ஜில்லென்று தனது ஆசை நாயகியிடம் போவதற்கு ஆயத்தமாய் மணியைப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தான். அவன் வீட்டில் தனது தாயோடு அன்று தன் சிநேகிதன் வீட்டில் கலியாணமென்றும் அதற்குப் போவதாயும் ராத்திரி அங்கிருந்து வந்தாலும் வரலாம்; இல்லாவிட்டாலுமில்லை என்றும் முன் ஜாக்கிரதையாகச் சொல்லிவிட்டானுகையால் அவன் பத்துமணி படிப்பதை மெத்த ஆவலோடு எதிர்நோக்கி இருந்தான்.

மணியும் முறையே சென்று பத்தடித்தது. உடனே மார்வாடி ஆயத்தமாய் வீதியில் நின்றிருந்த தனது மோட்டார் வண்டியில் வெகு மகிழ்ச்சியோடு ஏறிக்கொண்டு ஆலங்காத்தா பிள்ளை தெருவிற்கு ஓட்டச்செய்து அவ்விடம் வண்டி வந்தவுடன் வைதேகியின் வீட்டு வாயிலில் அதை நிறுத்தச்சொல்லி (தான் கீழே இறங்கி வண்டியோட்டியோடு தன்னை அங்கு கொண்டுவந்து விட்டதாக எவருக்கும் சொல்லவேண்டாம் என்று உத்தரவளித்து) காலை 5-மணிக்கு வண்டியைக்கொண்டுவரும்படி கூறிவிட்டு படி ஏறி உள்ளே சென்றான். நடைத்திண்ணையில் சிறிய விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருக்கிறது. திண்ணைமேல் படுத்திருந்த கூனற்கிழவி "ஐயோ! அப்பா!" என்று முனகிக்கொண்டிருந்தாள். அந்தச் சமயம் மார்வாடியைக் கண்ட உடன் அவள் எழுந்திருக்க முடியாமல் தவித்த வண்ணம் மெல்லப்பேசத் தொடங்கி "வாருங்காள் வாருங்கள். எனக்கு எதிர்பாராவிதம் இப்படி ஆபத்து வந்துவிட்டது. என்ன செய்யலாம்! எல்லாம் காலவித்தியாசம். என்னருமை மருமகப்பிள்ளையே! நேற்று நான் வந்த பிறகு குழந்தை செய்திகளைக் கூறினாள். அதைக்கேட்டவுடன் அவளை இன்று அனுப்பினேன். எங்கள் ஜாதியாசாரப்படி பெண்ணை மணையில் உட்கார வைத்துச் செய்யவேண்டிய சடங்குகளை எல்லாம் இப்போதுதான் புரோகிதர் வந்து செய்துவிட்டுச் சென்றார். இனி நீங்கள் குசாலாய் உள்ளே செல்லலாம். இதோ மெத்தைப்படி யிருக்கிறது. குழந்தை மெத்தைமேலேயே ஆயத்தமாக விருக்கிறாள். நீங்கள் போங்கள்"

என்று வெகு கனிவாய்க் கூறினள். அதைக் கேட்டமார்வாடி வெகு சந்தோஷத்தோடு கூனற் கிழவி காட்டிய மேன்மாடப் படியண்டை யில் சென்றான். அதற்குள் கிழவி "எனதருமை மணமகப்பிள்ளை யே! என்னவோ நான் பிழைப்பேனோ பிழைக்கமாட்டேனோ தெரி யாது. குழந்தையை உம்முடைய கையில் ஒப்பித்துவிட்டேன். இனி உங்கள்பாடு; அவள்பாடு. தாயில்லாத அந்தப்பெண்ணை இத்தனை நாள் எடுத்து வளர்த்துத்தக்க பெரிய மனிதராகிய உங்களிடம் விட்டுவிட்ட பிறகு இனி எனக்குக் கவலையேயில்லை" என்றாள். அதைக்கேட்ட மார்வாடி "பாட்டி! உங்கள் பேத்திக்கு யாதொரு குறையுமின்றி நடத்த என்னுயுள் காலம் வரையில் நான் கடமைப்பட்டவனாய் விட் டேன். இனி அதைப்பற்றித் தங்களுக்குச் சிறிதும் கவலையே வேண்டாம்." என்று கூறிக்கொண்டே மெத்தைமேல் ஏறினன். அங்கு சிறிய தாழ்வாரமும் அதற்குப் பக்கத்தில் ஓர் அறையு மிருந்தது. அந்த அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மார்வாடி கட்டிலடங்காக் களிப்போடு அந்த அறைக்குள் சென்றான். அங்கு ஒரு கட்டிலும், நாற்காலிகளும், ஒரு மேஜையுமிருந்தன. கட்டி லின் பக்கத்தில் அழகே வடிவாய் நின்றிருந்த நமது தருணியைக் கண் டதுதான் தாமதம்; மார்வாடிக்கு மோகலாகிரி தலைக்கேறிவிட்டது. அவன் தன்னை மறந்து தனது இருகைகளையும் விரித்துக்கொண்டு ஓடோடியும்போய் அந்த ஆரணங்கு நின்ற இடத்தையடைந்து "என் விலையிலா மாணிக்கமே! மாற்றிலா மரகதமணியே! என் கட்டிக்கரும் பின் சுவையே! நீ உன் கால்கடுக்க இந்நேரம் நிற்கலாகுமா? ஏன் நின்றுகொண்டிருக்கவேண்டும்? இதோ உன்னை நானே என் கையால் எடுத்துக்கட்டிலில் விடுகிறேன்" என்று கூறிய வண்ணம், ஆவேசத் தோடு அந்த மடமயிலைக் கட்டித் தழுவினன். அந்தப் பெண்மணி யோடு தானும் தபீரென்று கீழே விழுந்தான். தான் எதிர்பாராவித மாய்க் கீழே விழுந்ததும் வெட்கத்தாலும் துக்கத்தாலும், வாரி யடித்து எழுந்து நின்று அந்தப்பெண்மணியையும் தூக்கி எடுத்தான். அது பஞ் சினால் பெண்போலச் செய்திருந்த உயிரற்ற வடிவமாதலால், அதற்குள் ளிருந்த பஞ்செல்லாம் கீழேவிழுந்து நசுங்குண்ட அதிர்ச்சியால் பிய்த் துக்கொண்டு வெளிக் கிளம்பியதையும், வெறும் துணிகள் தாறுமாறாய் விழுந்ததையும், தலையின் மேலிருந்த மயிர் டோப்பா ஒரு மூலையில் போனதையும் கண்டமார்வாடி அப்படியே ஸ்தம்பித்துக் கல்லாய்ச் சமைந்துபோய் "ஐயோ! இதென்ன அநியாயம்! இது பஞ்சினால் செய்யப்பட்ட பொம்மையாக வல்லவா இருக்கிறது! ஐயோ! நேற்று நாம் அவளைக் கடையில் ஏமாற்றி நம்மிடம் சேர்த்துக்கொள்ளச் செய்த கள்ளத்தனத்திற்குப் பதிலாக இன்று அந்த நாரி என்னிடம் வந்து குள்ளநரியின் தந்திரமெல்லாம் காட்டி வெகு அழகாய் நடந்து என்னை ஏமாற்றி விட்டாளே! இதென்ன அநியாயம்!" என்று அறையின் கத வண்டைவந்து பார்த்தான். கதவு வெளிப்புறம் தாளிடப்பட்டு இருந்த

தால், திறக்கமுடியாம லிருந்ததைக்கண்ட மார்வாடி இன்னது செய்வ தென்பதை யறியாது திருடனுக்குத்தேள் கொட்டியதுபோலத் துடி துடித்து நின்றுவிட்டான்.

---

## 11-அதிகாரம்.

### இழவு வீட்டில் இடிவிழுந்தது.

ஆறுவது அதிகாரத்தில் ஒரு பெரிய ஜமீந்தாரைக்கொலை செய்து விட்டதாக மாணிக்க முதலி மீதில் குற்றம் சாட்டப்பட்டு கேஸ் பஞ்சாயத்தின் ஆதாவில் விசாரித்து அவரைக் கைது செய்து விட்டதாகவும் ராஜாராம் நாயுடு அங்கு வந்து தாம் உதயத்திற்கு வருவதாயும் சொல்லிச்சென்ற பிறகு அங்கு என்ன நடந்ததென் பதைக்கவனிப்போம்.

ஜெமீந்தாரினியம்மாளும் அவளது தம்பியும் சவத்தைவிட்டு அப்புறம் இப்புறம் செல்லாமல் திடீரென்று அவ்விதமான இடிவந்து தங்கள் தலையில் விழுந்துவிட்டதே என்று வருத்திக்கண்ணீர் விட்டுக் கதறியவாறு அன்று இரவு முழுவதும் பழய பல விசனங்களையும் துக்கங்களையும் எண்ணி எண்ணி வயிற்றெரிச்சல் தீரப் புலம்பிக் கொண்டே இருந்தார்கள். அந்த ஜெமீந்தாரினியம் மாளுக்கோ சில காலமாய்த் துன்பமே சம்பவித்துக்கொண்டிருந்த தாகையால் இன்ப மென்பதைத் தாங்கள் அறிந்தே இருக்கமாட்டார்கள் என்ற நிலைமை யில் இருந்த அம்மாளுக்குத் தன் புருஷனைத் தவிர வேறு கதியில்லை என்றும், அவர் முகத்தைப் பார்ப்பதால் தமது விசனம் சற்றுக் குறைந்திருப்பதாவும் எண்ணி இருவரும் காலத்தைப் போக்கிக் கொண்டிருந்த அந்த அம்மையை விட்டு திடீரென்று கொலையுண்டு இறந்து கிடந்ததன் நாயகனைப் பார்த்ததும் அவள் கும்பியில் மறைந்து கிடந்த விசனங்களெல்லாம் ஏககாலத்தில் ஒன்று கூடி அந்த அம் மையை நிலைதெரியாத விஸனக்கடலில் ஆழ்த்திவிட்டமையால் அந்த அம்மாள் யார் என்ன தேறுதல் சொல்லியும் கேளாமல் தன் துக் கம்தீரப்புலம்பிப் புலம்பி விடியற்காலம் ஆகும் தருணத்தில் அந்த அம்மாளுக்கு மூர்ச்சையாகிக் களைவந்து நினைவற்று நிலத்தில் விழுந்து விட்டாள். அவளது தம்பியாரும் மாணிக்க முதலியாரின் மனைவியும் புத்திரியும் தமது உயிருக்குயிரான பிரபு வைத் தனது கணவன்கொலை செய்து விட்டதாகக் குற்றம்சாட்டப் பட்டுப் பிடித்துக்கொண்டு போகப்பட்டவிஸனத்தினால் குன்றியவாறு இருந்ததருணம் அந்த அம்மையின் உயிரும் போகும் நிலைமைக்கு

வந்து விட்டதை எண்ண அவர்கள் மிகவும் திகிலடைந்து, பிரமித்து இனி என்ன செய்வதென்பதையறியாது உயிருள்ள சவம்போல ஆய் விட்டார்கள். பொழுது விடிய சற்று நேரத்திற்குள் ராஜாராம் நாயுடு அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் கையில் ஏதோ சில சாமான் களைக் கொண்டு வந்திருந்தார். அவர் வந்ததைக் கண்ட ஜெயராம் முதலியார் "வாருங்கள், வாருங்கள், உங்கள் வருகையைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். என்ன அநியாயம் பாருங்கள். இந்த விசனம் தாளாமல் அக்காள் மூர்ச்சித்து விழுந்துவிட்டாள். அதற்கென்ன செய்வது?" என்று வெகு விசனத்தோடு கூறினர்.

அதைக்கேட்ட ராஜாராம் நாயுடு "ஐயா! விசனம் என்பது லேசானதா? அதைத் தாங்க திடமான சரீரமாக விருந்தால் அது ஒன்றும் செய்யாது. இந்த அம்மையோ மிகவும் துக்கத்தால் பீடிக்கப் பட்டவர்களாயிற்றே. அதன்மேல் இதுவும் வந்துவிடவே அவர்களுக் குத் தாளாமல் நிலைகலங்கிவிட்டது. பயமில்லை. சற்று நேரம் போனால் தெளிந்துவிடும். தாங்கள் இங்குள்ளவர்களைச்சற்று வெளிக்கிளப்பிவிட்டு என்னையும் சவத்தையும் தனித்த இடத்தில் இருக்கச்செய்யவேண்டும். அரை மணி வேலைதான்," என்று கூறினர். உடனே ஜெயராம் முதலி யார் அப்படியே ஆகட்டுமென ஏற்றுக்கொண்டு அங்குள்ளவர்களை எல் லாம் வெளியில் போகச்சொல்லி விட்டு, ஜெமீந்தாரிணியம்மாளை இருவ ராகத் தூக்கிவெளியில் மற்றொரு அறையில் படுக்க விட்டார்கள். பிறகு அந்த விடத்தில் ராஜாராம் நாயுடு மாத்திரம் சவத்தோடு தனி யாக இருந்தார். ஜெமீந்தாரின்படுக்கையறையின் பக்கத்துஹாலிலேயே அவர் சவம்கிடந்தது. அங்குத்தனியாக விடப்பட்ட ராஜாராம் நாயுடு சுமார் அரைமணி நேரங்கழித்துக் கதவைத் திறந்து வெளியில் வந்து ஜெயராம் முதலியாரைக் கண்டு "ஐயா! என் வேலை தீர்ந்துவிட்டது; நான் இனிசரியான தகவல் கிடைத்தபிறகு வருகிறேன். நீங்கள் இனி உங்கள் வேலையைக் கவனிக்கலாம். நான் போய்வருகிறேன். ஆனால் நான் இங்குவந்து சவத்தோடு தனியாக விருந்ததாக யாருக்கும் தெரியவேண்டாம். முக்கியமாய்ப் போலீசாருக்குச் சொல்லவேண் டாம்" என்று கூறிவிட்டு அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டார். பிறகு அவர்களுடைய உற்றார், உறவினர், சிநேகிதர்கள் முதலிய எல்லோருக்கும் ஆள்மூலமாயும் தந்திமூலமாயும் தெரிவித்திருக்க, எல்லோரும், கிட்டவிருந்தவர்களெல்லாம், வந்து சேர்ந்தார்கள். அன்று ஜெமீந்தாரின் சவத்தை வெகு விமரிசையாய் அவர்கள் ஜாதி வழக் கப்படி எல்லாவித சடங்குகளையும் செய்து மாலை 5-மணிக்கு அடக்கம் செய்துவிட்டார்கள்.

ஜெமீந்தாரிணியம்மாளோ காலையில் மூர்ச்சித்து விழுந்தவள் தான். பிறகு அங்கு என்ன நடந்ததென்பதே தெரியாமல் ஒரே மூர்ச்சையாய்க் கிடந்தாள். அவள் அன்று முழுதும்அப்படியே இருந்



182826

தாள். மறுநாளும் கண் திறக்கவில்லை. ஜெயராம் முதலியாருக்கு வெகு பயமாய்விட்டது; இன்னது செய்வதென்பது தெரியாமல் தவிக்கிறார் பாவம். "இங்கு முதலாளி இறந்துவிட்டார்; அன்னவர் பத்தினிஇறக்குந்தருவாயிலிருக்கிறார்கள். மேலே யாகவேண்டியவேலைகளைச் செய்வதற்கு என்ன செய்வது, எப்படி நடத்துவது? அவள் தானே இப்போது இவ்விடத்திற்கு எஜமானி; அவளுக்கும் இவ்வித விபத்தா வந்து சேரவேண்டும்? என்ன செய்வேன்?" என்று வருந்திக் கண்ணீர்விட்டுக் கதறியவண்ணம் பெரிய டாக்டர்களை வரவழைத்து மருந்துகள் கொடுத்தார். அவள் பல் கிட்டிவிட்டது; வாய் திறக்கவுமில்லை. மருந்து உள்ளே செல்லவுமில்லை. எத்தனையோ பெரிய டாக்டர்களும் வந்து மருந்து, ஆகாரம் முதலியவைகளை இஞ்சேக்ஷன் மூலமாகவே உள்ளே செலுத்தினார்கள்; எதற்கும் அந்த அம்மைக்குக் குணமென்பதே தெரியவில்லை. இரண்டு நாளாயிற்று, மூன்றுவது நாளும் வந்துவிட்டது. அந்த அம்மாளென்னவோ, சற்றும் தெளிவடைந்தாளில்லை. நாடி எல்லாம் விழுந்துவிட்டது. வைத்தியர்களினால் ஆனவரையில் எவ்வளவோ சிகிச்சை செய்தும் அதெல்லாம் பலிக்காமல் வீணாய்விட்டது. வைத்தியர்கள் எல்லோரும் ஒருவரைப்போலொருவர் "இனி இந்த அம்மாள் பிழைக்க மாட்டாள். எங்களாலான சிகிச்சைகளைச் செய்துவிட்டோம். இனி கடவுள் ஆயுளைக் கெட்டியாகப் போட்டிருந்தால்தான் பிழைக்க வேண்டுமேயன்றி மனுஷ்ய யத்தனத்தில் பிழைப்பது கிடையாது" என்று கூறி எல்லோரும் போய்விட்டார்கள்.

அதைக்கேட்ட ஜெயராம முதலியாரோ உருகித் தவித்து இடிந்து உட்கார்ந்துவிட்டார். "ஆ! உலகத்தில் கஷ்டம் வரும். இப்படியா ஒன்றன்மேல் ஒன்றாய் இடிஇடிப்பது போல வரவேண்டும். அவர்தான் அகால மரணமாய் இறக்க விதித்திருந்தது. அங்ஙனமே இறந்துவிட்டார். இவளுக்குக்கூடவா இப்படிப்பட்ட துடிமடியான சாவு நேரிடவேண்டும். ஐயோ! என்னருமை அக்கா! என் ஜென்மத்தில் எனக்கு சகலமான அருமை பெருமைகளையும் காட்டி, ஊட்டிப் பெற்ற தாயைவிடப் பன்மடங்கு அதிக செல்லத்தோடு என்னைத் தாய் தந்தையர்கள் இறந்த துயரம் தெரியாதிருக்கும்படியாய் அவ்வளவு அன்பாய் வளர்த்த என்னருமை மாமா திடீரென்று கொலையுண்டு இறக்கவும், என்னன்னைக்குச் சமமான அக்காவுக்குமா இப்படி திடும் என்று மரணம் நேரிடவேண்டும்? ஐயோ! அக்கா! இந்த உலகத்தில் எனக்கு உங்களைத்தவிர வேறு மனிதர்களும் உண்டோ? என்னை எவ்வளவோ அருமையாய் வளர்த்துக் கடைசியில் இப்படியா பரதேசிபோல விட்டுவிட்டுச் செல்லவேண்டும்? ஆ! என்னால் தாங்கமுடியவில்லையே. அக்கா, அக்கா! நீ உன் கண் திறந்து என்னைப் பார்க்கமாட்டாயா! ஐயோ!! நான் கதறுவது உனக்குக் கேட்கவில்லையா? நான் சற்று முகம் வாடியிருந்தால் நீ தாளமாட்டாயே! என் மனம்

உருகிக் கருகிப் பாகாயோடியவண்ணம் நான் கத்துவது உன் காதுக் கெட்டாவகையில் என்பாபம் உன்னை அவ்விதம் செய்துவிட்டதோ? ஐயோ! அநியாயமாய் மடிந்துபோன என் மாமனைக் கண்டு தாளாமல் நீயும் கூடவே செல்லத் துணிந்துவிட்டாயோ! அல்லது உனக்கு இனி என்னை சவரக்ஷிக்கப் பிரியமில்லாது என்னை அநாதையாக விட்டுவிட்டுச் செல்கிறாயோ? ஆ! என் பாவிக்கண்ணால் உன் கோரமான படுக்கையைப் பார்க்க என் இருதயம் வெடித்து விடும்போலவிருக்கிறதே. ஐயோ! என்னருமை மாமாவின் கோரமான கொலையுண்ட சவத்தைக் கண்டும், என்னரிய அக்கா! உன் கடுமையான படுக்கையைக் கண்டும் என் உயிர்போகவில்லையே. ஆ! நானென்ன செய்வேன்! மாமாவுக்கு மேலே ஆகவேண்டிய காரியத்தைச் செய்து முடிக்குமுன் உனக்கே இப்பாவி கையால் எல்லாம் செய்யும்படி வைத்துவிட்டாயோ! ஆ! இந்த அபாரமான ஜெமீன் சமஸ்தானம் இப்படியா வார்ஸ் அற்றுப் பாழாய்ப் போகவேண்டும்? ஐயோ! ஒன்றா இரண்டா? 2 கோடி ரூபாய் பெறுமான சொத்துக்களை யாளக் கொடுத்து வைக்காமல், இருவரும் இப்படியா மாளவேண்டும்? ஆ! என்ன செய்வேன்? அக்கா, அக்கா! உனக்கு கொஞ்சங்கொஞ்சமாய் எல்லாம் அடங்கிக்கொண்டே வந்துவிட்டதே, இனி வாய் திறந்து அன்பாக,ஜெயராமா! என்று எப்போது அழைக்கப்போகிறாய் அக்கா! என்னருமை அக்கா! நான் என்ன செய்வேன்?'' என்று பிரலாபித்த வண்ணம் உட்கார்ந்திருந்தார். அந்தச்சமயம் அங்கு ஒருவர் துக்கம் விசாரிக்க வந்தார். அவரைக்கண்ட ஜெயராம் அவளை விட்டு வெளியில் எழுந்துவந்தார். வந்தவர் வெகு விசனத்தோடு கண்ணீரைக் காணாய் ஓடவிட்டவண்ணம், ''ஐயோ! இந்த அனியாயம் எங்கு நடக்கும்? உலகத்திற்கே திலகம்போல விளங்கிய உத்தமரைக் கொலை செய்ய எந்தச் சண்டாளனுக்கு மனம் துணிந்ததோ தெரியவில்லையே. இதன் தகவல் ஏதாவது தெரிந்ததா? குற்றவாளி யகப்பட்டானா?'' என்று வெகு விசனத்தோடு கேட்டார்.

அதைக்கேட்ட ஜெயராம முதலியார் ''இன்னும் இதுவரையில் ஒருவித தகவலும் தெரியவில்லை. அன்று சவத்தைப் போலீஸார் பார்த்து விசாரித்து மாணிக்க முதலியாரின்மேல் குற்றம் ஏற்பட்டதனால் அவரைக் கைது செய்துவிட்டார்கள். நான் துப்பறியும் நிபுணரான ராஜாராம் நாயுடுவை வரவழைத்து எல்லா விவரத்தையும் சொல்லியிருக்கிறேன். அவர் தன்னாலானமட்டும் முயற்சித்துக் கண்டுபிடிப்பதாகக் கூறினார். அவர் சென்று இன்று நான்கு நாள்களாகின்றன. இன்னும் யாதொரு சேதியும் தெரியவில்லை. என்ன செய்யலாம்; எல்லாம் கால வித்தியாசந்தான்'' என்றார்.

அதைக்கேட்ட வந்தமனிதர் ''அடடா! ராஜாராம் நாயுடுவின் சேதி உங்களுக்குத் தெரியாதா? அது தெரிந்திருக்கும் என்று தானே நான் எண்ணி இருந்தேன்.'' என்றார்.

அந்த வார்த்தையைக் கேட்ட ஜெயராம முதலியார் "என்ன! என்ன!! ராஜாராம் நாயுடுவிற்கு என்ன நேர்ந்து விட்டது? எனக்கு ஒன்றும் சேதியே தெரியாதே" என்று பதறப்பதறக் கூறினர். அதைக்கேட்ட வந்தமனிதர், "ஆமாம். நீங்கள் இந்த துக்கத்தில் பேபர் எங்கு படிக்கப்போகிறீர்கள்! நானும் இன்று காலையில் ரயிலில் வரும்போது தான் பேபர் பார்த்தேன். அதில் இந்த விபரீத மான செய்தியைப் படித்ததும் என் உயிரே அரை நாழி என்னிடமில் லாமல் அகன்று விட்டதென்றே சொல்லவேண்டும். ஆஹா! எப்பேர்ப்பட்ட புலி அவர்? முந்தாளுள் இரவு அவர் ஏதோ காரி யார்த்தமாய்க்கல்கட்டாமெயிலில் பிரயாணம்செய்துகொண்டிருக்கையில் அவருக்குத் தெரியாமல் யாரோ பகைவன் வந்து அவரைக் கட்டி ரயில் ஓடும் சமயம் உருட்டி விட்டானும். அவரை உருட்டிய சமயம் எதிர்ப்பக்கத்திலிருந்து ஒரு கூட்ஸ் வண்டியும் வெகு வேகமாய் வந்து விட்டதாம். உடனே எதிர்ப்பக்கத்து வண்டியின் எஞ்சின் டிரைவர் அதைக்கண்டு வண்டியை நிறுத்தி, அந்த வண் டியையும் நிறுத்தச் செய்தானும். பிறகு விழுந்திருந்த மனிதரை வந்து பார்த்த கும்பலில் சிலர் "ஆ! இவர் துப்பறியும் நிபுணரான ராஜாராம் நாயுடுவல்லவா" என்று வாய்விட்டுக் கூறியபிறகே எல் லோருக்கும் அவரைத் தெரிந்ததாம். உடனே அவரை எடுத்து ஒரு ஸ்பெஷல் வண்டியில் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்திருக்கிறார்களாம். அவர் பலத்த அடிபட்டு பிரக்ஞை என்பதே இல்லாமல் படுத்திருக்கிறாராம். அவர் பிழைப்பது வெகு துர்லபம். பிழைக்கமாட்டார் என்று டாக்டர் கூறுகிறாராம். அவர் மண்டையில் பலமான அடிபட்டு விட்டதாகவும், அவருடைய மூளையே சிதறி விட்டதாகவும் கூறுகிறார்களாம். ஆஸ்பத்திரியில் யாரையும் விடுகிற தில்லையாம்; அவரைப்பார்க்க வேண்டுமென்று போனவர்களெல்லாம் திரும்பிவந்து விட்டார்களாம். பாக்கி விவரம் நாளைப் பேபரில் வருமாம். அதைப்படித்த எனக்கு இன்னதென்று தெரியாதவித மான மனவேதனையும் கலக்கமும் உண்டாகிவிட்டது" என்றார். அதைக்கேட்ட ஜெயராமமுதலியார் இடியோசையைக் கேட்ட நாகம்போல பிரமித்து "ஆ! அவருக்கா அப்படிப்பட்ட விபத்து வந்துவிட்டது?" என்று கூறி அப்படியே கல்லாய் இருந்துவிட்டார். பிறகு வந்த மனிதர் அவரைச் சற்று தேற்றி, "ஐயா! வீணாய் வருத்தப்பட்டு என் செய்வது? ராஜாராம் நாயுடு இதைக் கட்டாயம் தான் கண்டு பிடிப்பார் என்று எல்லோரும் நம்பி இருந்தீர்கள். இனி என்ன செய்யலாம்? அவருக்கு வந்துள்ள ஆபத்து நீங்கி அவர் தப்பிப் பிழைத்துக் கொண்டாலுங்கூட அவர் இனி இப்பேர்ப்பட்ட வேலையில் தலையிட குறைந்தது 6 மாதகாலமாகிலும் செல்லும் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். நீங்கள் அவரை நம்புவதில் இனி பிரயோஜனமில்லை. அவர் பிழைத்து, ஆறுமாதம் கழித்து வந்து

உங்கள் கேஸைக்கண்டு பிடிக்கும் வரையில் நீங்கள் பேசாமலிருந்தால் குற்றம் செய்யாதவரான மாணிக்க முதலியார் அதுவரையில் சிறையி லிருக்க வேண்டியல்லவா வரும். மேலும் கொலைசெய்த நிஜக்குற்றவாளி தப்பித்துக்கொண்டு ஓடிக் கண் காணமல் மறைந்துவிட்டாலும் விடலாமல்லவா? ஆகையால் நீங்கள் இனி உடனே வேறு எந்த ஊரிலிருந்தாகிலும் துப்பறியும் உத்தியோகஸ்தர்களை வரவழைத்து இந்த விசித்திரமான கேஸைக் கண்டு பிடிப்பதுதான் நீங்கள் இப் போது முக்கியமாய் எடுத்துக் கொள்ளவேண்டிய காரியம்'' என்று கூறினர்.

அதைக்கேட்ட ஜெயராம் முதலியார் இடிந்துபோனவராய் ''ஐயோ! ஒன்றன்பின் ஒன்றாய் நமக்கு இப்படியா வரவேண்டும்? என்னருமை மாமன்தான் கொலையுண்டு அகால மரணமாய் இறந்தார் என்றால், என் அக்காளும் அதே விசனத்தினல் பீடிக்கப்பட்டவளாய் உயிர் போகும தருவாயிலிருக்கிறாளைய்யா! எத்தனையோ பெரிய டாக்டர் கள் எல்லாம் பார்த்துக் கைவிட்டுவிட்டுச் சென்றார்கள். நான் இந்த துக்ககரமான காட்சியைப் பார்க்கவும் விசனப்படவுமா பிறந்தேன். அவள் ஒருத்திதானே. இந்த ஜெமீன் சொத்து பூராவுக்கும் அதி காரியான அவளுடைய உயிரும் போய்விட்டால் இந்த சொத்து அனி யாயமாய் வார்ஸ் அற்றுப் போய்விடுகின்றதே. உலகத்தில் ஒருத்த ரில்லாவிட்டால் ஒருத்தர் இருக்கமாட்டார்களா. இருவருமா இப் படி வாயில் மண்ணைப் போட்டுக்கொண்டு போய்விடவேண்டும்? ஆ என்ன செய்வேன்! ஐயா! இந்த ராஜாராம் நாயுடுவையே எங்க ளுக்குத் தெரியாது. நாங்கள் விசனத்தோடு அன்று ஊரிலிருந்து வந்தபோது சில ஜனங்கள் எங்களுக்கு அவரைத் தெரிவித்ததனல் நான் அவரை யழைத்தேன். அவருக்கும் திடீரென்று இத்தகைய விபத்து வந்ததும் என் துரதிர்ஷ்டந்தான் என்று சொல்லவேண்டும். ஐயா! எனக்கு வேறு துப்பறிபவரைத்தெரியாது. தாங்கள் வெகு அனு பவசாலியாகக் காணப்படுகிறீர்கள். நீங்கள்தான் தயவுசெய்து உங் களுக்குத் தெரிந்த துப்பறிபவர் யாராவதிருந்தால் சொல்லுங்க ள். ஆயிரமல்ல, லக்ஷமானாலும் செலவிட்டு அந்த உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடித்து என் வயிற்றெரிச்சல் அடங்க அவனை பதிலுக்கு பதில் தூக்கு வாங்கிவிட்டால் என் மனம் குளிரும். எந்தச் சண்டாளன் அவரைத் துணிந்து இவ்விதம் செய்தானே அவனைச் சக்கை சக்கையாய் வெட்டி எடுத்தாலும் தீராதய்யா. இந்த ஒரு உபகாரம் உங்கள் ஆப்த நண்பரைப் பற்றிச் செய்தே தீரவேண்டும் என்று வெகுவாய் மன்றாடிக் கேட்டார்.

அதைக்கேட்ட வந்த மனிதர் ''ஐயா! எனக்குக் கூட துப்பறிப வர்களை அதிகமாய்த் தெரியாது. ஆனாலும் பேபர்களில் கொலைக் கேஸ், கொள்ளைக் கேஸ் முதலியவற்றை இன்னார் கண்டு பிடித்தார்கள் என்று அடிக்கடிவருகின்றது. அதைத்தான் பார்த்திருக்கிறேன். ஆகை

யால் அந்த விலாசத்தைச் சொல்கிறேன். அந்த விலாசமும் பெயரும் உள்ள இடத்திற்கு நீங்கள் ஒரு அவசர தந்தியடித்து அவரை வரவழைத்தால் அவர் வந்துவிடுவார். பிறகு உங்கள் கேஸ் விவ ரத்தை எல்லாம் கூறினல் அவர் என்ன சொல்கிருரோ பார்ப்போம். ஆனல் ராஜாராம் நாயுடுவைப் போலக் கெட்டிக்காரர் என்று சொல்ல முடியாது. அவரும் ஏதோ கேஸ்கள் கண்டு பிடித்ததாக பேபரில் பிரஸித்தியாய் வந்திருப்பதால் கூறுகிறேன். இதனல் நீர் சொன் னீரே காரியமாகவில்லையே என்று ஒருகால் ஆகாவிட்டால் என்மேல் குற்றம் சொல்லலாகாது. நீர் கேட்டுக் கொண்டதன் மேல் நான் ஏதோ தெரிந்ததைச் சொன்னேன். இதோ அவர் அட்ரஸ் எழுதித் தருகிறேன். ஒருகைபாரும். நமக்கு அதிர்ஷ்டமிருந்தால் வேலை எப்ப டியும் சரியாய் முடிந்துவிடும். இல்லையேல் அந்த ராஜாராம் நாயுடு வந்து செய்தாலுங் கூட அது அவராலும் ஆகாமல் தான் நின்றுவிடும். எல் லாவற்றிற்கும் பகவானுடைய கடாக்ஷம் வேண்டுமல்லவா? எதற்கும் நாம் இனி வெறுமை இருப்பதைவிட, "முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்," என்பதை எண்ணி நாம் வேலை செய்வதே நல்லதெனத் தோன்றுகின்றது. என்ன சொல்கிறீர்?" என்ருர்.

அதைக்கேட்ட ஜெயராம் "ஐயா! எப்படியானுலும் சரி. அதைப் பற்றி நான் சற்றும் வித்தியாசமாய் நினைக்கமாட்டேன். நாம் செய்வ வதைச் செய்தேதான் தீரவேண்டும். அது எப்படி முடிந்தாலும் பர வாயில்லை. நான் இப்போது வெளியில் சென்று தந்தியடிக்க முடியாது. என் பொறுப்பை நீங்கள் எடுத்துக்கொண்டு எனக்காகத் தாங்கள் சென்று தந்தி எப்படி அடிக்க வேண்டுமோ அப்படி யடித்துவிட்டு வாருங்கள். இதோ பணம் கையில் செலவிற்கு வைத்துக் கொள்ளுங் கள்" என்று 10 ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்தார்

வந்த மனிதர்:—என்ன முதலியாரே! என் உயிருக்கு உயிரான ஆப்த நண்பருக்கு நான் இந்த அற்ப உபகாரம் செய்வதற்கு உம்மிட மிருந்து பணம் வாங்கிக் கொள்ளவேண்டுமா? எனக்கு அவ்வளவு கஷ்ட தசையை ஈசன் வைக்கவில்லை. எனக்கும் வேண்டிய வரையில் தாராளமாய்ப் பணத்தையும் கொடுத்து அதற்கு ஏற்றபடி நான்கு குழந்தைகளையும் கொடுத்திருக்கிருர். இன்னும் கேட்டால் நீர் எனக்குமணமகனுய் வரும்படியான சந்தர்ப்பம் சீக்கிரம் வாய்க் கும் என்று எண்ணியிருந்தேன். என்னருமை நண்பர் புரு ஷோத்தமர் மாண்டு விட்டதில் அது இனி நடக்குமோ நடக் காதோ தெரியவில்லை. அவருக்கும் எனக்கும் இதேவார்த்தைதான். அப்பா! நான் தான் பெண்ணில்லாப்பாவியாகி விட்டேன். ஆகை யால் உன் பெண் சுலோசனையை எங்கள் ஜெயராமனுக்குத் தான் கொடுக்கவேண்டும் என்று என்னைக்கண்டபோதெல்லாம் அவர் கேட் பார். நானும்அதற்கு இசைந்து அப்படியே கொடுப்பதாக வாக்குக் கொடுத்துவிட்டேன். என்னுடைய துரதிர்ஷ்டம் தான், அவருக்கு

இப்படித் திடீரென்று மரணம் வந்துவிட்டது.—என்று சற்று கண்ணீர் விட்டார். அதைக்கேட்ட ஜெயராம முதலியார் "ஐயா! இதற்காகத்தாங்கள் கண்ணீர் விட்டு வருந்தவேண்டாம். என் மாமன் உத்தரவுப்படியே நானும் நடக்கச்சித்தனுக விருக்கிறேன். என்மாமாவும் அக்காவும் என்னேடு அடிக்கடி உனக்கு பெண்பேசியாய் விட்டது என்று கூறுவார்கள். நான் அதற்கு ஒன்றும் சொன்னதே கிடையாது. மேலும் உங்கள் வீட்டில் வேறுயாரை யாவதும் நான் பார்த்ததில்லையாகையால் எனக்குத் தாங்கள் இன்னுரென்று தெரியாமல் விழித்தேன். இனி நீங்கள் சொன்ன விவரத்திலிருந்தும், என் மாமா அக்கா இருவரும் சொன்னதிலிருந்தும் உங்களை நான் இனி வேறு அன்னிய மனிதனைப் பாவிக்கவே முடியாது. நீங்கள் எங்கள்மாமாவிடம் எப்படி நடந்துகொண்டீர்களோ அதே போல என்னிடமும் வித்தியாசமின்றி சுவாதீனமாய் நடந்துகொள்ளலாம். இந்த சந்தர்ப்பத்தில் நீங்கள் இங்கு வந்ததே என்பாக்யமென்று தான் சொல்லவேண்டும். இந்த சமயம் நான் தனியாகக் கிடந்து அழுது கொண்டிருக்கையில் எனக்குச் சற்று ஆறுதலளிக்கும் பொருட்டே தாங்கள் இங்கு வந்ததாக எண்ணுகிறேன். இப்போது இரவு மணி எட்டிருக்கும். தாங்கள் இனி எங்கேயும் போகவேண்டாம். இங்கேயே தாங்கள் இருந்து விடலாம். என் அக்காவின் நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்து விட்டு வருகின்றேன்" என்று கூறிய வண்ணம் உள்ளே எழுந்து சென்றுர். ஜெமீந்தாரினியாகிய பங்கஜவல்லியோ முன்னிருந்ததைவிடகேவலமான நிலைமையில் இருந்தாளேயன்றி குணம் என்பது கிஞ்சித்தும் ஏற்படவில்லை. அந்த நிலைமையிலேயே இருந்த தன் அக்காளைக் கண்டதனல் உண்டான விசனம் தாங்கமாட்டாமல் அவர் வாய் விட்டுக்கதறி, "அக்கா! என்னைக் கடைசியில் கைவிட்டு விட்டா செல்லப்போகிருய்? ஐயோ! என் உயிரும் உன்னேடு கூடப் போய் விடாதா?" என்று கூவியதைக்கேட்டவந்த மனிதர் திடுக்கிட்டு உள்ளே ஓடிவந்து ஜெயராம முதலியாரைச் சற்று தேற்றி "ஐயா! என்ன இப்படிப் பேதைமைத் தனமாய்க் கதறுகின்றீரே. அந்தோ! அந்த அம்மையின் துயரம் யாருக்கு வரும்! ஒன்றன் பின் ஒன்றுய் இடியே தலைமேல் இடித்தால் அதை எப்படித்தான் தாங்க முடியும்? மெலிந்தமேனியையுடைய அந்த அம்மாள் விசனத்தினல் இவ்விதம் பீடித்திருக்கிறுர்களே யன்றி தேகத்தில் யாதொரு பிணியு மிருக்காது. அதைப்பற்றித்தாங்கள் கவலைப்படவேண்டாம். இம்மா திரியானசந்தர்ப்பத்தில் எத்தனையோபெயர்கள்இவ்விதம் மூர்ச்சையாகி 10,15 நாள்கள் கூட இருந்து பிறகு தெளிவதுண்டு. அதை நான் கண்ணுரக்கண்டிருக்கிறபடியால் அதைப்பற்றி உறுதியாய்ச் சொல்லுகிறேன். நீங்கள் சற்றும் பயப்படவேண்டாம். உங்கள் அக்காவிற்கு உயிர்ச்சேதம் வராதென்று தோன்றுகின்றது. துக்கம் தாங்காமல் இவ்விதம் ஆகிவிட்டது. இன்னும்போகப்போக எல்லாம் தெளிந்துவிடும். நீங்கள்

மாத்திரம் ஆகாரத்தைப் பலவந்தமாகவாகிலும் உள்ளே செலுத்துங்கள். அது உள்ளே சென்று இந்தக்களேபை நிவர்த்தி செய்யும். நீர் வருந்தவேண்டாம். நான் சென்று அந்தத் துப்பறிபவருக்குத் தந்தியடித்துவிட்டு வருகிறேன். நீர் தைரியத்தைக் கைவிடவேண்டாம்.'' என்று கூறிவிட்டு எழுந்து வெளியில் போய்விட்டார்.

போனவர் அரைமணி நேரத்தில் திரும்பி வந்து "ஐயா! இனி இரவு காலத்தில் தந்தியடிக்க மாட்டார்களாம். நாளை உதயத்திற்கு அடித்தால் அது சேர்ந்த பிறகு அவர் வருவதற்கு நாளையோ மறு நாளோ ஆகிவிடும். ஆகையால் நான் யோசித்துப் பார்த்தேன். அப்படித் தந்தியடித்தும் பிரயோஜனமில்லை என்று தோன்றியதாகையால், உடனே என் ஆளை 9 மணி வண்டிக்கு அந்த ஊருக்கே நேரில் அனுப்பி அவரையழைத்துக் கொண்டுவரும்படியாகச் சொல்லி ஒரு கடிதமும் எழுதியனுப்பி இருக்கிறேன். அவரிருக்கும் ஊர் கிட்டவிருப்பதால் அவர் நாளை காலையிலேயோ அல்லது மாலைக்குள்ளேயோ வந்துவிடுவார். நீர் இனி கவலையே படவேண்டாம்.'' என்று கூறி அவரைத்தேற்றி வெளியில் அழைத்துக்கொண்டு வந்தார்.

பிறகு அன்று இராப்போஜனத்தை ஜெயராம் வெறுத்து, வெறுமை படுப்பதாக உத்தேசித்து, வந்தவரை உண்பிக்க, இருவரும் உட்கார்ந்தார்கள். பிறகு வந்தவர் "என்ன ஜெயராம் முதலியாரே! உங்கள் மாமாவைக் கொலைசெய்யத் தக்க மனிதர்கள் இந்த உலகத்திலேயே இல்லை என்பதை நான் அறிவேன். ஆனாலும் அவரைக் கொலை செய்திருக்க, அவருக்குத் தெரியாமலேயே அவருக்கு யாரோ விரோதிகள் இருந்து தானே அவரை இப்படி எதிர்பாராவிதமாய்க் கொலை செய்திருக்க வேண்டும். ஆகையால் அவர் பெட்டி முதலியதை நாம் திறந்து யாராவது விரோதிகள் எழுதியுள்ள கடிதம் இருக்கின்றதா வென்று பார்க்கலாமா? நமக்குள் நாம் சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாமல்லவா! அதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு ஜெயராம் முதலியார் "ஐயா! உமது இஷ்டம்போலவே பார்க்கலாம். எனக்கும் அதைப் பார்க்க வேண்டுமென்பது தான் அபிப்பிராயம். ஆயினும் நான் மாத்திரம் தனித்து எந்தக்காரியமும் செய்யலாகாதென்று எண்ணி வெறுமை இருந்துவிட்டேன். இப்போது தக்க பெரிய மனிதர்களாகிய தாங்களும் கூடவிருப்பதால் ஆக்ஷேபணையின்றி நாம் அதைச் செய்யலாம்'' என்று கூறினர்.

அதைக் கேட்ட வந்தவர் "நாம் செய்வதைப்பற்றி உங்கள் அக்காள் யாதொரு சந்தேகமாவது, வித்தியாசமாவது கொள்ளாமலிருப்பார்களா? அதற்கு இடமில்லாமல் நாம் செய்யவேண்டும்'' என்றார்.

அதைக் கேட்ட ஜெயராம் முதலியார் "ஐயா! என் அக்காள் என்னைப்பற்றி வித்தியாசமாகவே எண்ணியது கிடையாது. என்னை

முற்றும் நம்பியவள்; நாமென்ன தப்பிதமான காரியம் எதுவும் செய்யப் போகிறதில்லையே. ஆகையால் அதைப்பற்றித் தாங்கள் சற்றும் சந்தேகமே கொள்ளவேண்டாம். எழுந்து வாருங்கள்." என்றுகூற, உடனே இருவரும் ஜெமீந்தாரின் படுக்கையறைக்குச்சென்றார்கள். அங்குச்சென்ற இருவருக்கும் ஜெமீந்தாரின் நினைவு வந்துவிட்டபடியால் அவர் படுத்த இடத்தையும், உட்கார்ந்த இடத்தையும் பார்த்துக் கண்ணீர்விட்ட வண்ணம் அவரது கைப்பெட்டியைத் திறந்தார்கள். அதில் கணக்கு வழக்கில்லாமல் பெரிய பெரிய கடிதங்களும் தஸ்தாவேஜிகளும் இருந்தன. அவைகளின் விஷயம் எல்லாம் அவருடைய ஜெமீனைச் சேர்ந்த விஷயங்களாகவே இருந்தது. வேறு வித்தியாசமான லெட்டரே காணப்படவில்லை. அவர்கள் அதைவிட்டு வேறு பெட்டியைத் திறந்தார்கள். அதிலும் சில கடிதங்கள் இருந்தன. அதற்கெல்லாம் கீழே ஒரு சிறியபெட்டி மேல்கட்டுக் கட்டி அவிழ்க்காமல் வைத்திருந்ததைக் கண்டு அதைத்திறந்து பார்க்க வெண்ணி அதை எடுத்தார்கள். அது கைக்கு கனமாயிருந்தபடியால் அதை மெல்ல அவிழ்த்துப் பெட்டியைத் திறந்து பார்த்தார்கள். அதற்குள் துணிகளால் மூடப்பட்ட சில படங்களிருந்தன. உடனே அதையும் அவர்கள் பிரித்துப் பார்த்தார்கள். ஆஹா! அந்தப்படத்தில் ஒரு பெண் வடிவம் காணப்பட்டது. அந்தப் பெண்ணின் அழகைப்போல உலகத்திலேயே எவரும் கண்டிருக்கமாட்டார்கள். அத்தகைய பெண் வடிவங்கள் நின்ற படங்கள் இரண்டும், ஜெமீந்தாரும் அவருடைய மனைவியும் இருந்த படமொன்றும், இன்னும் பெரியவர்களின் படங்கள் பலவும் இருந்தன. அவைகளை எல்லாம் தூரவைத்துவிட்டு அந்த அழகிய பெண் வடிவத்தை மாத்திரம் வந்தவர் கண் கொட்டாமல் பார்த்துப்பார்த்து ஆனந்தமடைந்து "ஆஹா! இந்த மடமங்கை யாரோ! இப்படிப்பட்ட பெண்களும் உலகத்திலிருப்பார்களோ! இதுவேண்டும் என்று சித்திரக்காரனைக்கொண்டு எழுதின படமாக இருக்கவேண்டுமேயன்றி, இது நிஜமான மனிதரைப் பிடித்த படமல்லவென்றே எனக்குத்தோன்றுகின்றது. ஆனால் இந்தப்படத்திலிருப்பவளை நான் நேரில் எத்தனையோதரம் பார்த்திருக்கிறேன். இருந்தாலும் இதைப் பார்த்தவுடன் என் கண்ணே நம்பிக்கை கொள்ளவில்லை. ஹூம். எல்லாவற்றிற்கும் கொடுத்து வைக்க வேண்டாமா! ஒரு விதத்தில் ஜெமீந்தார் கேவலம் அதிர்ஷ்ட ஹீனரென்றேசொல்ல வேண்டும். சரி; இதைப் பார்க்கப் பார்க்க எனக்குப் பழைய நினைவெல்லாம் வருகின்றது. இதை வைத்துக் கட்டும்" என்றுகண்ணீர்வடித்த வண்ணம் அதை வைத்துவிட்டுப் பின்னும் பார்த்தார்கள். அந்தப் பெட்டியின் அடிபாகத்தில் ஒரு கள்ள அறை இருக்கக்கண்டு அதைத் திறக்கும் வழியைக் கண்டுபிடித்து அதைத் திறந்தார்கள். அதற்குள் சில கவருக்குள் கடிதங்கள் இருக்கக்கண்டு அவைகளை எல்லாம் எடுத்துப் படித்தார்கள். படித்ததும் இருவருக்கும் வெகு ஆச்சரியகா

மான சில சேதிகள் கிடைத்தன. இருவரும் ஒருவரோடொருவர் இன்னது பேசுவதென்பதை யறியாது அரைநாழிகை நேரம் பேசாதிருந்துவிட்டு, மறுபடியும் அதை இரண்டு மூன்று தரம் படித்துப் பார்த்த பிறகு, மறுபடியும் வேறொரு கடிதத்தை எடுத்துப் பிரித்தார்கள். அதைப் பிரித்தால், அதில் ஏதோ எழுத்துக்கள் இருந்தது தெரிந்ததேயன்றி அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறதென்று விளங்கவே இல்லை. அதைப்பார்க்க இருவரும் இதென்ன விசித்திரமான ரகஸிய கடிதமாக விருக்கிறதே என்று வியந்து அதைத் திருப்பித்திருப்பிப் பார்த்தார்கள். அதில் ஒருவருக்காகிலும் பொருள் விளங்கவே இல்லை. அதையார் எழுதியிருப்பார்கள்? இந்தக் கடிதமென்னவோ ரகஸிய சமாசாரத்தையே கொண்டிருக்கிறதென்பது நன்றாய்விளங்குகின்றது. இதை விளக்கிப் பார்த்தால் தானே பொருள் கிடைத்துவிடும். ஆகையால் இதில்தான் ஏதோ மர்மம் இருக்கவேண்டும். இதைப்பார்த்து இப்படியே ஒரு நகல் எடுத்துக் கொண்டால் இதைத் துப்பறிபவரிடம் காட்டி பொருளை விளக்கச்செய்து சேதியையறிந்து கொள்ளலாம்; முதலியாரே! இதைப் பார்த்து ஒரு நகல் எடும்'' என்றார் வந்தவர். உடனே அதைக் கையில் வாங்கி வேறொரு காகிதத்தில் அதைப் போலவே நகல் எடுத்துக் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்ட பின் வந்தவர் அதற்கு மேலும் பெட்டியை நன்றாய்ப் பார்த்துவிட்டு அதில் அந்தப் பொருள் விளங்காத கடிதத்தைத் தவிர வேறு எதுவும் வித்தியாசமானது காணப்படவில்லை யாதலால் அந்தக் கடிதத்தில் தான் ரகஸியம் இருக்கவேண்டும். இது ஜெமீந்தாருடைய கையெழுத்தல்ல. இது வேறு யாருடைய எழுத்தோ. இதற்குச் சந்தேகம் இல்லையாகையால் நாம் முதலில் இதைத்தான் கவனிக்கவேண்டும் என்று எண்ணிய வண்ணமாய் இருவரும் பெட்டியைப் பூட்டிக் கொண்டு வெளியில் வந்தார்கள். வெளியில்வந்த மனிதர்கள் அந்தக் கடிதத்தைத் திருப்பித் திருப்பி எத்தனையோ முறை படித்தார்கள். எப்படிப் படித்தும் அதில் யாதொரு பொருளும் விளங்கவில்லை. ஜெயராம் முதலியார் வந்தவரை நோக்கி ''ஐயா! இதில் உங்களுக்கு ஏதாவது பொருள் விளங்குகின்றதா'' என்றார்.

அதைக்கேட்டவந்தமனிதர் (இனிநாம்அவரை அவருடையநாமத்தைச் சொல்லியே யழைப்போம்) கோபால முதலியார்—''ஐயா! எனக்கு விளங்கிவிட்டால் அதை உமக்குச் சொல்லாமலா இருப்பேன்? இது என்னவோரகஸியமான கடிதம் என்பதற்குச் சந்தேகமே இல்லை. ஒருகால் இதன் கருத்து உங்கள் மாமா, அக்கா இருவருக்கும் தெரிந்திருக்குமோ என்னவோ; அதைக்கேட்டுத் தெரிந்து கொள்வதற்கும் அந்த அம்மாள் கண்ணையே திறக்கவில்லையே. எதற்கும் இதைத் தாங்கள் என்னிடம் கொடுத்துவையுங்கள். நான் துப்பறிபவரிடம் இதைக் காட்டி இதன் பொருளை விளக்கிவிடச் செய்கின்றேன். ஜெமீந்தாரின் கொலை சம்பந்தமான ரகஸியம் இதில்தானிருக்க வேண்டுமென

எனக்குத் தோன்றுகின்றது. சரி; நாம் வெகு நேரமாய் விழித்திருக்கிறோம். சற்று படுப்போம் வாரும்" என்று கூப்பிட்டார்.

ஜெய:—ஐயா! எனக்குத் தூக்கமென்பதே வரவில்லை. நான் என் அக்காள் எப்படியிருக்கிறாள் என்பதைப் பார்க்கப் போகிறேன். எந்த இடம் தங்களுக்கு சௌக்கியமோ அங்குப் படுத்துக் கொள்ளுங்கள்—என்று கூறிவிட்டு பங்கஜவல்லியிடம் சென்றார். அப்போதும் அந்த அம்மை அதே நிலைமையில் இருந்தாளாதலால் அவருக்கு துக்கம் சற்றும் குறைவுபட ஹேதுவே இல்லாமற் போய் விட்டது. அவர் தமது தமக்கையைப் பார்க்கப் பார்க்க அவரது மனம் நெருப்பில் விழுந்த புழுவைப்போலத் துடிக்கவாரம்பித்தது. இன்னும் இரவு ஏற ஏற அவருக்கு வருத்தமும் ஏறிக்கொண்டே செல்ல, கடைசியில் அவர் அப்படியே தரையில் சாய்ந்து தூங்கிவிட்டார்.

.... .... .... ... ... ...

மாணிக்க முதலியாரோ ஜெயிலில் தம்மைப் போலீசார் அடைத்துச் சென்ற பிறகு அந்த வீட்டு விஷயமான விவரம் எதையுமறியாமல் புலம்பிக்கொண்டே இருந்தார். அவரை ஜாமீனில் விடும்படியாக ஜெயராம முதலியார் கேட்டதற்குப் போலீஸார் கொலைக் கேஸின் குற்றவாளியை ஜாமீனில் விட முடியாதென்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார்களாதலால் அவருக்கு ஆகாரம் மாத்திரம் வீட்டிலிருந்து கொடுக்கும்படியான உத்தரவை போலீஸாரிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள். ஆகையால் அன்றுமுதல் தினம் இரண்டு வேளையும் ஜெமீந்தார் வீட்டின் வேலைக்காரன் சாப்பாடு கொண்டு போய்ப் போட்டுவிட்டு வந்துகொண்டிருந்தான். ஆனால் அவன் வீட்டில் நடந்த எந்த வரலாற்றையும் அறியாதவனாகையால் சாப்பாட்டை வைத்துவிட்டு வந்துகொண்டிருந்தான்.

மாணிக்க முதலியாருக்குவீட்டில் என்ன நடக்கின்றதென்பதைக் கேட்க ஆவலாயிருந்தபடியால் அவர் சிறைக்குச் சென்ற நான்காவது நாள் காலையில் போஜனமெடுத்து வந்த தமது வேலைக்காரனோடு "இன்று இரவு நீ சாப்பாடுகொண்டு வரும்போது என் பெண் ஜாதியை, என்ன செய்தி? பிறகு ஏதாவது தகவல் தெரிந்ததா வென்று கேட்டுக்கொண்டு வந்து ரகஸியமாய் அதை யாரும் அறியாதபடி என்னிடம் தெரிவிப்பாய்" என்று சொல்லியிருந்த படியால் அன்று அந்த வேலைக்காரன் அதை யப்படியே மாணிக்க முதலியாரின் மனைவியிடம் தெரிவித்தான். அதைக்கேட்ட அந்த அம்மை வெகு விசனத்தோடு "அப்பா! இன்று சாப்பாட்டை நானே எடுத்துக்கொண்டு போகிறேன். எனக்குத் துணையாக மாத்திரம் நீ வந்தால் போதும்" என்று கூறிவிட்டு அன்றைய இரவை எதிர்பார்த்திருந்தாள்.

இரவு 8 மணி சமயமாயிற்று; அந்த அம்மாள் சாப்பாடு முதலியதை எடுத்துக்கொண்டுபோய் ஜெயிலை யடைந்தாள். அங்கு பாராக் கொடுத்துக்கொண்டிருந்த சேவகன் பெண்பிள்ளை வருவதைக் கண்டு "இங்கு யாரும் உத்தரவின்றி உள்ளே செல்ல அனுமதி கிடையாது. வழக்கமாய் ஆண்பிள்ளைகள் சாப்பாடு கொண்டுவருகிறவர்கள் தான் இன்றும் வரவேண்டும். வெளியில் போங்கள்" என்று அதட்டிக் கூறியதைக்கேட்ட அந்த அம்மை கண்ணீர் பெருக "ஐயா! தாங்களே அப்படிச் சொன்னால் நான் என்ன செய்வேன்? என் பர்த்தாவின் தலைமேல் அபாண்டமான குற்றத்தைச் சுமத்தி ஜெயிலில் தான் வைத்திருக்கிறீர்களே; நான் வந்தும் அவரைப் பார்க்கக் கூடாதா? அதுவும் உங்கள் சட்டத்தின் திட்டமா? வேண்டாம். என்னை வயிறெரியச் செய்வதில் உமக்கொன்றும் லாபமில்லை. என் பதியைப் பார்த்துவிட்டு வருகிறேன். தயவுசெய்து சற்று உத்தரவு கொடும்" என்று மன்றாடிக் கேட்டாள்.

அதைக்கேட்ட போலீஸ் சேவகன் முன்னிலும் பலமான குரலில் அதட்டிப் பேசத்தொடங்கி "சும்மா வெளியே போகிறாயா உன்னைத் தள்ளிக்கொண்டுப் போகச்சொல்லட்டுமா" என்று அதட்டினான்.

அதைக்கேட்ட அந்த அம்மாள் நடுநடுங்கி "ஐயோ! இதுவும் என் காலவித்தியாசமா! அநியாயமான சட்டத்தை நிர்ணயித்த போலீஸும் உண்டோ?" என்று கதறியபொழுது அங்கு இன்னொரு போலீஸ் சேவகன் தோன்றி அந்த அம்மையைக் கண்டு என்னவென்று விசாரிக்க, அந்த அம்மை அங்கு நடந்த வரலாறுகளை எல்லாம் கூற, அதைக்கேட்ட வந்த சேவகன் அங்கு முன்னாலிருந்த சேவகனைக் கண்டு, "என்ன ஐயா! பெண்பிள்ளைதானே என்று உமது அதிகாரத்தைச் செலுத்துகின்றீரோ. வழக்கமில்லாத வழக்கத்தை உம்மை யாரய்யா செய்யச்சொல்லி உத்தரவிட்டார்கள். இந்த அம்மாள் வந்தால் என்ன? வேறு யார் வந்தாலென்ன உமக்கு? இவர்கள் அதிகாரியிடமிருந்து உத்தரவு வாங்கிக்கொண்டு வந்திருக்கும்போது உம்முடைய உத்தரவு செல்லுமா ஐயா? இந்தப்பெண்பிள்ளைக்கு என்ன தெரியும் என்று நீர் அதிகாரம் செலுத்துகிறீரோ அநியாயம் செய்யவேண்டாம். திறந்து விடும் கதவை." என்று கூறிய வண்ணம் அவனை விலக்கிக்கதவை திறந்து "அம்மணி! இதோ திறந்துவிட்டேன்; நீங்கள் எந்த அறைக்குப் போகவேண்டுமோ அங்கு போங்கள்" என்று கூறியவாறு உள்ளே அனுப்பினான். அந்த அம்மாள் அவரை நிரம்பவும் கொண்டாடியவாறு, தன் வேலைக்காரன் காட்டிய இடத்திற்குச் சென்று தன் நாயகன் அலங்கோலமாய் உட்கார்ந்திருந்த நிலைமையைக்கண்டு தாங்கமாட்டாத விசனத்தோடு கண்ணீர் விட்டுக்கதறிய வண்ணம் சாப்பாட்டை முதலியாரிடம்

கொடுத்துவிட்டு அவருக்குத் தேறுதல் கூறியவளாய், அன்று வீட்டில் இருக்கும் சந்தர்ப்பம், வந்தமனிதர் பேபர் சேதி தெரிவித்தது எல்லாவற்றையும் சுருக்கமாகக் கூறினுள். அதைக்கேட்ட முதலியார் இன்ன செய்வதென்று அறியாமல், "ஆ! நம்முடைய தீவினையின் பயன்தான் ராஜாராம் நாயுடுவிற்கு இப்படி எதிர்பாராவிதமான ஆபத்து நேர்ந்துவிட்டது. ஐயோ! சிவகாமி! நான் இனி என்ன செய்வேன்! இந்த ஜெயிலைவிட்டு வெளியில் எப்படி வருவேன்? என்ன ருமைப்பிரபுவிற்குத்தான் அப்படி எதிர்பாராவிதமான விபத்து எந்தச் சண்டாளன் உண்டாக்கினுனே தெரியவில்லை. அது என் தலைக்கு வந்து விடிந்தது. ஆனுலும் அதை நான் லக்ஷியம் செய்யாமல் தான் ஈச்வரன் மேல் பாரத்தைப்போட்டு இருக்கிறேன். குற்ற மற்ற நிரபராதிப் நான் என்பதை இந்தப் போலீஸ்காரர்கள் அறியா விட்டாலும் என்னைப்படைத்த பிரம்மதேவன் கூடவா அதை யறிந்திருக்க மாட்டான்? அவனறியாதது எதுவுமில்லை யாதலால் அவன் எனக்கு இப்போது இந்தக் கஷ்டத்தைக் கொடுத்தாலும், மற்றொரு முறையாகிலும் என் கஷ்டத்திற்கு விமோசனம்ஏற்படுத்துவானேயன்றி என்னைக் கை விட்டுவிடமாட்டான். அந்தஜெமீந்தாரினியம்மாளுக்குமா இப்படிமரண மடையும் தருவாயில் இருக்கும் படியான காலம் வரவேண்டும்? ஐயோ! அதைக்கேட்கும்போதே என் ஹிருதயம் வெடித்து விடும்போல விருக்கிறதே." என்று கூறிக் கண்ணீர் விட்ட வண்ணம், "வெறொரு துப்பறிபவருக்குத் தந்தி யடித்தாய் விட்டதா என்று உனக்குத்தெரியுமா?" என்றார்.

அதைக்கேட்ட சிவகாமியம்மாள் வந்த மனிதரே தந்தியடிக்கப் போயிருக்கிறார். அவர் எப்படியும் அந்தத்துப்பறிபவரை வரவழைத்து இந்த வழக்கில் நிஜக்குற்றவாளியைக் கண்டு பிடித்து விடுவதாக உறுதியாய்க்கூறுகிறார். ஆகையால் தாங்கள் கவலைப்பட வேண்டாம். இன்னும் நமக்கு கஷ்டகாலம் நிவர்த்தியாகவில்லை. அது நிவர்த்தியாகும் வரையில் இங்கு இருந்துதானே தீரவேண்டும், நாதா! வருத்தப்படவேண்டாம் நேரமாகிவிட்டது. நான் இனி நின்றால் அந்தப் பாவிசேவகன் மறுபடியும் வந்து வெருட்டுவான். நான் இனி அன்றாடம் தகவலை உங்களுக்கு எழுதி யனுப்பி விடுகிறேன். அதைரகசியமாய்ப்படித்து விட்டுத் திருப்பியனுப்பி விடுங்கள். தினம் நான் வருவதற்கு முடிந்தால் வருகிறேன். இல்லையேல் கடிதம் எழுதி யனுப்புகிறேன். நாதா! நான் வரட்டுமா? ஐயோ! தங்களை இந்தக் கோலத்தோடு காணும் படியாய் நான் என்ன பாபம் செய்தேனோ?" என்று கண்ணீரைப்பெருக்கிக்கொண்டே வீடு திரும்பிவந்து சேர்ந்தாள்.

... ... ... .... ... ...

அன்று இரவு கழிந்து பொழுதும் புலர்ந்தது; உதயமானதுமாகாததுமாயிருக்கும் போதே, வெகு தூரதேசத்திலிருந்தவர்களான ஜெமீந்தாரின் சொந்தக்காரர்கள் அந்தச் செய்தியையறிந்து துக்கம் விசாரிக்க வந்தார்கள். வந்ததும் அவர்கள் அந்த அநியாயமான கொலையை எண்ணிக் கதறியவாறு "ஐயோ! புருஷோத்தமா! நீ இப்படியா சாகவேண்டும்? பங்கஜம்! பங்கஜம்!" என்று கூறியழுதவாறு உள்ளே வந்தார்கள். அதற்குள் சிவகாமியம்மாள், அவர்களுக்குப் பங்கஜத்தின் நிலைமையைக் கூறியவாறு அவர்களை அந்த அம்மாள் படுத்திருந்த அறைக்கு அழைத்துச் சென்றாள். பங்கஜம் படுத்திருந்த பலகை காலியாயிருந்ததைக்கண்ட சிவகாமி திடுக்கிட்டு "ஐயோ! உயிரிருக்கிறதோ இல்லையோ என்று அவ்வளவு துர்ப்பலமாய்ப் படுத்திருந்த அந்த அம்மாள் எங்கே காணவில்லையே!" என்று கதறினாள். அதற்குள் ஜெயராம் முதலியார் கோபால முதலியார் எல்லோரும் எழுந்து வந்தார்கள். வேலையாட்களெல்லோரும் ஓடிவந்தார்கள். "பங்கஜவல்லியம்மாள் எங்கே போய் விடுவார்கள்? நாலு நாளாய்க் கண்ணைத் திறக்கவே இல்லையே! அத்தகைய மனுஷி எங்கே" என்று அந்த பங்களா முற்றும் மூலைக்கொருவராகத் தேடினார்கள். எங்கும் அந்த அம்மாளைக் காணவில்லை. எல்லோரும் அப்படியே திக்பிரமை கொண்டு "ஐயோ! இழவு வீட்டில் இப்படிப்பட்ட இடியும் விழுமா?" என்றுகதறிக் கல்லாய்ச்சமைந்து, இன்னது செய்வதென்று தெரியாமல் ஸ்தம்பித்துப்போய் விட்டார்கள். ஜெயராம முதலியாரின் உயிர் பாதிக்குமேல் போய் விட்டதென்று சொல்லும்படியான நிலையில் "ஐயோ! இதென்ன அநியாயம்" என்று கூறியவாறு கீழே விழுந்து விட்டார்.

---

182826

# மதிப்புரை.

கடல் சூழ்ந்திலகும் இப்பூவுலகின் கண்ணெனவிளங்கும் இந்தியாவென்னும் பாதகண்டமாகிய தாய்நாட்டிற்குத் திலகம்போன்ற தமிழ்நாடான சென்னை மாநகரின்கண் சிறப்புற்றோங்கும் திருவல்லிக்கேணியில் நடைபெறுஞ் ஜெகன் மோகினி யென்னும் மாதாந்திர நாவற்பத்திரிகை ஒன்று என் பார்வைக் கெட்டியது. அதனை ஆராயுங்கால் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் உலகவியல், அன்பு, ஒழுக்கம், வாய்மை, இலலறம், இராஜபக்தி, கடவுள்பக்தி, தேசபக்தி, சகோதரவாஞ்சை, சம்சார நேர்மை, பெண்ணணி, யென்னும், கற்பிலக்ஷணம், ஒருமை. யாவும் ஒருங்கே சேரப்பெற்ற நாவலாகவியற்றி படிப்போர்கினிமையும் மதிவிலாசத்தையுந் தருகுமாராய்ந்து, மாதாந்திர பத்திரிகையாக, ஜெகன்மோகினி யெனப் பெயரமைத்து பொது நலத்தை விரும்பி வருஷத்திற்குசொற்பமாக ரூபா. 1-8 சந்தாவாக ஏற்படுத்தி வெளியிட்ட பண்டித சிரோன்மணி ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகியம்மாளவர்களுக்கு பிரதி உபகாரமாக நம்மிந்தியமக்களனைவரும் சந்தாதார்களாகச் சேர்ந்து ஜெகன்மோகினியை முன்னேற்றக் கடமைப்பட்டுளோம். நிற்க,

வேதியர்குலத்து மாது
வித்வமே மிகுந்தமாது
போதினி லுறையுமந்த
பாரதித்தன்னை யொப்பு
ஓதிடத் தகுந்தமாது
அறிவினிற் சிறந்தமாது
நீதியை நிகழ்த்தமாது
நெஞ்சினில் நினைவுகொண்டே
உலகியல் அனைத்துமார்க்க
உகந்தொரு நாவலென்ன
நலம்பெற வியற்றிமீண்டும்
நாற்றமிழ் கவிஞர்யாரும்
உளமதுமகிழுமாறு ஜெகன்
மோகினி யென்றுலவுமாறு
நிலவிட செய்தவன்னாள்
நற்றமிழ்க்கிணை காணேனே
பாலோகனியோ பாகுசேர்கண்டோ
பகரமிர்த மிதுவோவன்று
மேலோர்புகழும் பாரதியோ
மேதினியரவ்வை யிவளோ
வேலே நிகர்த்தவிழியாள்
வை. மு. கோதைநாயகியாள் பூவுலகின்
பாலேயிருந்து புகழ்பொருளும்
பொன்னிதியு மோங்கிவாழி.

இப்படிக்கு உத்திரவின்படி,
பாலபாரதி T. P. & S. V. N.
**மோகன புருஷோத்தம்பிள்ளை.**

(விகடநேசன். 8—4—1926) R. S. C. உபபாத்திகாசிரியர்.

[இந்த மதிப்புரை இயற்றியவருக்கும் இதனை மேற்கொண்டு வெளிவந்த நமது விகடநேசனுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகிறேன். பத்திராதிபர்.]

# வைதேகி

இதன் முதல் பாகம், காண்போர் மனதைக்காந்தம் போலக் கவரும் தன்மைவாய்ந்த வெகு அழகிய ஆப்டோன் படங்களுடன் பைண்ட் செய்யப்பட்டிருக்கிறது.

**விலை ரூ. 1—4—0**

நமது சந்தா நேயர்களுக்கும் அல்லது அவர்கள் மூலமாய் வாங்குகிறவர்களுக்கும் ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும்படி ஏற்பாடு செய்திருக்கிறோம்.

வி. பியில் அனுப்பினால் தபாற் செலவு அதிகமாவதால் ரூ 1/- மணியார்டர் செய்தால் புத்தகத்தை அனுப்புகிறோம்.

சொற்ப பிரதிகளே கைவசமிருப்பதால் வேண்டியவர்கள் உடனே எழுதி பெற்றுக்கொள்ளவேண்டும். இனி தீர்ந்துவிட்டால் மறுபதிப்பு அச்சான பிறகு தான் கிடைக்கு மென்பதைக்கவனிக் கவும்.

**ஜெகன்மோகினி ஆபீஸ்.**

26. தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை.

---

வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார் பி· ஏ. யால்.

எழுதப்பட்ட அற்புதமான நாவல்கள்.

| | | | |
|---|---|---|---|
| கனகாம்புஜம் அல்லது | | | |
| கள்வனும் விலைமகளும் | 2 | 12 | 0 |
| மாயசுந்தரி | 0 | 12 | 0 |
| வஸந்தகோகிலம் | 1 | 0 | 0 |

**வத்ஸலா அண்டு கம்பெனி**

திருவல்லிக்கேணி, மதராஸ்.

# கிறிஸ்மஸ் புது வருட பண்டிகைகளில்
# பரிசளிக்கத் தகுந்த சாமான்

இச்சஞ்சிகை சந்தாதாரர்களுக்குமட்டும் இக்குறைந்த விலை.


கடியாரங்களின் விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

முந்துங்கள் ! முந்துங்கள் !! முந்துங்கள் !!!


**எல்லா கடிகாரங்களுக்கும் 5 வருஷம் உத்தரவாதம்**

**22 காரட்டு ரோல்டுகோல்டு கைக்கடியாரங்கள்**


**பட்டுப் பட்டையுடன் நன்றாய் உழைக்கக்கூடியன.**




NO. 505, Rs. 10.




NO. 507, Rs. 12.




NO. 518, Rs. 10



NO. 511, Rs. 11.



NO. 517, Rs. 13.



NO. 510, Rs. 13

நேர்த்தியான வேலைப்பாடுள்ளது

சரியான காலத்தைக் காட்டக்கூடியது.

உடனே எழுதுங்கள்.

ஒவ்வோர் கடியாரத்துடனும் ஓர் உயர்ந்த பவுண்டன் பேனா
இனாமாக அனுப்பப்படும்.

விலாசம் :— **பீட்டர் வாட்ச் கம்பெனி,**

**போஸ்ட் பாக்ஸ் நெ. 27**

**மதராஸ்.**

# அமிர்தாஞ்சனம்

அமிர்தா ஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரூ. 0-10-0




இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

உடனே முந்துங்கள்.

மோஹினி தைலம்.
பாட்டில் 1-க்கு 0—12--0

படைமருந்து
டப்பி 1-க்கு 0--6—0

பல்போடி
டப்பி 1-க்கு 0—2—0

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

## அமிர்தாஞ்சன் டிபோ,

7. தம்புச் செட்டி வீதி, சென்னை.

சென்னை, நோபில் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.